விலை: 60.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 027 வள்ளுவர் ஆண்டு 2054 தை 01 ஞாயிற்றுக்கிழமை (15.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## நீண்டகாலமாக வழிபாடு செய்ய முடியாமல் இருக்கும் ஆலயங்களை விடுவிக்க ஜனாதிபதி உத்தரவிட வேண்டும்

### கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)
தேசிய பொங்கல் வழிபாட்டுக்காக யாழ் வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாக சைவ மக்கள் வழிபாடு செய்ய முடியாமல் இருக்கும் ஆலயங்களை விடுவிக்க உத்தரவிட வேண்டும் என செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.
நேற்று அவர் விடுத்த விசேட அறிக்கையிலேயே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
சைவத் தமிழர்களின் முக்கிய வழிபாட்டு நாளாகிய பொங்கல் 23

## சுன்னாகத்தில் வாள்களுடன் ஒருவர் கைது


(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் பிரதேசத்தில் இருந்து 43 வயதுடைய நபர் ஒருவர் இரண்டு வாள்களுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.
சுன்னாகம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப் 23



வாசகர்கள், விளம்பரதாரர்கள், வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும் இனிய
தைத்திருநாள்
நல்வாழ்த்துக்கள்

# தேசிய பொங்கல் விழா
# யாழ்.வருகிறார் ரணில்

### காணி விடுவிப்பு தொடர்பான விசேட கூட்டத்திலும் இன்று கலந்து கொள்வார்



*(யாழ்ப்பாணம்)*
தேசிய பொங்கல் விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.
அதனைத் தொடர்ந்து காணி விடுவிப்பு தொடர்பில் விசேட கூட்டம் ஒன்றிலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.
(23ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றுக்குள் தவறிவிழுந்த பெண் பலி

(சாவகச்சேரி)
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் கிணற்றுக்குள் தவறி விழுந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். 04

### 5 தமிழ்க் கட்சிகளுக்கிடையே
## புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று கைச்சாத்திடப்பட்டது


04

## நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைவோம்

### பொங்கல் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)
தமிழர்கள், கொண்டாடும் உழவர் திருநாளான தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வாழ்த்து தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். விவசாயத்துடன் தொடர்புடைய தைப்பொங்கல் பண்டிகையின்போது, அதிக விளைச்சலைப் பெறுவதற்கு ஆசீர்வாதம் வேண்டி சூரியபகவானுக்கு 04

### ஐரோப்பா செல்ல முயன்ற
## 46 இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

(சென்.டெனிஸ்)
கடல் மார்க்கமாக ரீயூனியன் தீவிற்குள் சட்ட விரோதமாக பிரவேசிக்க முயற்சித்த 46 இலங்கை பிரஜைகளை அந்நாட்டு அதிகாரிகள் விமானம் மூலம் திருப்பி அனுப்பியுள்ளனர்.
2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி நீர்கொழும்பில் இருந்து பல நாள் 23

## வாள் முனையில் மிரட்டி மோ.சைக்கிள் கொள்ளை

### இருபாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் இருபாலை பகுதியில் வாள் முனையில் மோட்டார் சைக்கிள் ஒன்று வழிப்பறி செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
இருபாலை, டச்சு வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 23

## கூட்டமைப்பின் பெயரை பயன்படுத்த முடியாது

### சுமந்திரன் எம்.பி எதிர்ப்பு

(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரை வேறு தரப்புக்கள் பயன்படுத்த முடியாது என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.
ஐந்து தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டிணைவில் உருவாகியுள்ள புதிய 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நின்று காக்கும் உங்கள் நாளிதழ்

SPAROOS

இன்று முதல் பாரம்பரியத்தை காத்திடும் உள்ளூர் சுயமுயற்சியாளர்களை உலகறிய செய்திடும் எமது பணிகள் ஆரம்பம்



மண்ணிலும், மனதிலும் விதைகளை விதைத்து உயிரை உரமாக்குபவர் அனைவருக்கும் Sparoos இன் இனிய தமிழர் திருநாளாம்

தைத்திருநாள்

நல் வாழ்த்துக்கள்

மேலதிக தகவல்களுக்கு :

077 863 0888

(14264)


# சமுர்த்தி கொடுப்பனவிற்கு பதிலாக - 10 கிலோ அரிசி

## ஜனாதிபதி அறிவிப்பு

சமுர்த்திக் கொடுப்பனவுகள் கிடைக்காத சுமார் 20 இலட்சம் குடும்பங்களுக்கு, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் 10 கிலோ அரிசி வீதம் வழங்குவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் முதல் காலாண்டின் பின்னர் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றமடையும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, 2024ஆம் ஆண்டு இந்நிலையில் மேலும் முன்னேற்றம் ஏற்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமாயின், அரச துறை மாத்திரமன்றி தனியார் துறையும் வலுப்பெற வேண்டுமென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மக்கள்படும்இன்னல்களை தாம் மறந்து விடவில்லை எனத் தெரிவித்த ஜனாதி பதி ரணில் விக்கி ரமசிங்க எவ்வா றேனும்மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்எனவும் தெரிவித்தார். (4-7)


மணமகன் தேவை

- 1990இல் பிறந்த மணமகள் ரோகினி கிரகபாவம் 24
- 1991இல் பிறந்த மணமகள் திருமலை ரேவதி பாவம் 10 தொழில் நில அளவையாளர்.
- 1996இல் பிறந்த மணமகள் இஞ்சினியர் பூசம் பாவம் 20
- 1991இல் ஜேர்மனியில் பிறந்த மணமகள் அனுசம் பாவம் 38 1/4 கல்வி Master Of Finance (ஜேர்மனியில் மணமகன் வேண்டும்)

மணமகள் தேவை

- 1988இல் பிறந்த மணமகன் MB.B.S DOCTOR விசாகம் பாவம் 27
- 1987இல் பிறந்த மணமகன் H.N.D.A. பட்டதாரி அச்சுவினி பாவம் 60 செவ் 7 ல்
- 1994இல் பிறந்த மணமகன் ஆசிரியர் பரணி பாவம் 27
- 1984இல் பிறந்த மணமகன் B.S.C திட்டமிடல் அதிகாரி செவ்வாய் லக்கினம் பாவம் 44 புனர்பூசம் 04

விமலம் திருமண சேவை

077 240 9276 - Sri Lanka

001437 244 6737 - Canada

(14237)



ஸ்ரீ குமரன்

நகை மாளிகை

Sree Kumaran Jewellers

அழகிற்கு அழகு சேர்க்கும் பாரம்பரியம் மிக்க அழகிய தரம் குன்றாத தங்க ஆபரணங்களை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்



எமது அன்பர்கள்
ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய
தைத்திருநாள்
நல்வாழ்த்துக்கள்





இல.74, பிரதான வீதி,
நெல்லியடி.

No.74, Main Street, Nelliyady.
Tel: 021 226 4465
077 873 3482

(C-5637)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் விடுதலை விரைவாக கைகூட துதியுங்கள்

## பொங்கல் ஆசிச் செய்தியில் கலாநிதி.ஆறு.திருமுருகன்



(யாழ்ப்பாணம்)

ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலை விரைவாக கைகூட இறைவனைத் துதியுங்கள் என செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட பொங்கல் நாள் ஆசிச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்

தைப்பொங்கல் நாளில் வீட்டு முற்றத்தில் தவறாது பொங்கி வழிபாடு செய்யுங்கள், மூத்தோரை வணங்கி ஆசி பெறுங்கள், அயலவர்களுடன் உணவைப் பகிர்ந்து உறவின் வலிமையைப் பெருக்குங்கள், புதிய சிந்தனைகளை உருவாக்கி நல்லன செய்யத் திட்டமிடுங்கள், பகையை மறந்து அன்பைப் பெருக்குங்கள், ஆலயத்திற்குச் சென்று அனைவருக்குமாகப் பிரார்த்தியுங்கள்.

எங்கள் தலைமுறையை இன்று துன்புறுத்தும் போதை நஞ்சு ஒழிய வேண்டுதல் செய்யுங்கள், எம் மண்ணில் நாம் மகிழ்வாய் வாழ, நீதி நிலைக்க இறையருளை மன்றாடுங்கள், விடுதலை செய்யப்பட்ட, சிறைவாசம் அனுபவித்த உறவுகள் தம் உறவுகளுடன் மகிழ்வாக வாழ உறுதுணை செய்யுங்கள், ஏனையவர்களின் விடுதலை விரைவாகக்கைகூட துதியுங்கள்

மருத்துவமனைகளில்வாழும் உறவுகள் நலமாகத் திரும்ப அகத்தால் வேண்டுங்கள். மனிதம் சிறக்க மகத்தான பொங்கல் நாளில் அன்பர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன் எனத் தெரிவித்தார். (4)

# கோட்டாவிடம் வாக்குமூலம் பெற கோட்டை மன்று உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகையில் கண்டுபிடிக்கப்பட்ட பணம் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு, கோட்டை நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் முன்னெடுக்கப்பட அரச எதிர்ப்புப் போராட்டங்களின் போது, ஜனாதிபதி மாளிகையில் போராட்டக்காரர்களால் 17.5 மில்லியன் ரூபாய் பணம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து, குறித்த பணத் தொகை கோட்டை பொலிஸாரிடம் போராட்டக்காரர்களால் ஒப்படைக்கப்பட்டிருந்ததோடு இது தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

### உயர்தரப் பரீட்சை

# இணையவழி விண்ணப்பம் இன்றுடன் முடிவடைகிறது

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கு அமைவாக இவ்வருடம் நடைபெறவுள்ள உயர்தர பரீட்சைக்கான மதிப்பீட்டு பரிசோதகரின் விண்ணப்பங்களை மீளப் பெறுவதற்கு பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இணையவழி முறையின் ஊடாக விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வியாழக்கிழமை (12) முதல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அது இன்றுடன் (15) முடிவடைவதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும் இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் தங்களுக்கு வழங்க வேண்டிய விடைத்தாள் மதிப்பீட்டுக் கட்டணம் முறையாக செலுத்தப்படவில்லை என எதிர்ப்பு தெரிவித்து மதிப்பீட்டு ஆய்வாளர்கள் விண்ணப்பங்களை அனுப்ப மறுத்துள்ளனர். (4)

# மார்ச் 20 இற்கு முன்னர் மாணவர்களுக்கு சீருடை

### கல்வி அமைச்சு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான சீருடைகள் மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்துள்ளார்.

முதலாவது தொகை சீருடை தொகையை சீன அரசாங்கம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கல்வி அமைச்சிடம் கையளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்நாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான வருடாந்த பாடசாலை சீருடைத் தேவையில் 70 வீதத்தை பூர்த்தி செய்ய சீன அரசாங்கம் இணங்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (4)

# 'காரை மதுரகவி' 'கலை ஞானச் சுடர்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய

**பண்பாட்டுப் பெருவிழா (2022/12/16)** அன்று இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் மிகச் சிறப்பாக நடைபெற்ற வேளை கவிமாமணி,கலாரத்தினம், முத்தமிழ் கலைஞான வாரிதி, செஞ்சொற் கலைஞர், சமூக திலகம், தேசோதய தீபம், வர்ணனைச் செம்மல், தெய்வீக ஞானத் தமிழ்மணி, மகாகவி சாகரம், கவியரசு, ஆன்மிகச் சுடர், தெய்வீக ஞானத் தமிழருவி ஆகிய சிறப்பு விருதுகளைப் பெற்ற



**செந்நாப்புலவர், வர்ணனைக் கலாநிதி மதுரகவி.காரைஎம்.பி.அருளானந்தன்**
JP,BA.(Hons),M.A (சைவ சித்தாந்தம்)

(சர்வதேச ஒளிபரப்பாளர், தெய்வீகப் பேருரையாளர், முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்ணனையாளர்,DANTV,ஓம்TV பிரதமவர்ணனையாளர்) அவர்களுக்கு

**கவிதைத்துறை ஆளுமைக்கான (2022)**

கலைஞானச்சுடர் விருதினை யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர், (2022) உயர்திரு கணபதிப்பிள்ளை - மகேசன் அவர்களும் நல்லூர் பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான திருவாட்டி எழிலரசி அன்ரன் யோகநாயகம் அவர்களும் வழங்கி கௌரவிக்கின்றார்கள். அருகில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருவாட்டி இராஜமல்லிகை சிவசுந்தர சர்மா அவர்களும் பாராட்டி கௌரவிக்கும் காட்சி

**காரை மண் தந்த கவிஞர் மதுரகவி தெய்வத் தமிழுக்கு பல மகத்துவ சிறப்புக்களை சேர்த்து பல விருதுகளைப் பெற்ற செந்நாப்புலவர் எந்நாளும் மேலும் பல ஆளுமை விருதுகளைப் பெற வாழ்த்துவோர்**

(சி-5772)

நிறுவன முதல்வர்.முகாமையாளர்கள். ஊழியர்கள்
**S.V.MURUGESU நிறுவனம்**
152 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடர்;

# தொடரை வென்றது நியூசிலாந்து



பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கெதிரான இறுதி ஒருநாள் போட்டியில், நியூசிலாந்து அணி 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் நியூஸிலாந்து அணி கைப்பற்றியது.

கராச்சியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 280 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பகர் ஸமான் 101 ஓட்டங்களையும் ரிஸ்வான் 77 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், டிம் சவுத்தி 3 விக்கெட்டுகளையும் லொக்கி பெர்குசன் 2 விக்கெட்டுகளையும் பிரேஸ்வெல் மற்றும் இஷ் சோதி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 281 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நியூஸிலாந்து அணி, 48.1 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால், நியூஸிலாந்து அணி 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, க்ளென் பிலிப்ஸ் ஆட்டமிழக்காது 63 ஓட்டங்களையும் கேன் வில்லியம்சன் 52 ஓட்டங்களையும் டெவோன் கோன்வே 52 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக க்ளென் பிலிப்ஸ் தெரிவு செய்யப்பட்டதோடு, தொடரின் நாயகனாக டெவோன் கோன்வே தெரிவு செய்யப்பட்டார். (4)

## புரிந்து...

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசிய கட்சி, மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன இணைந்து புதிய கூட்டணிக்கான ஒப்பந்தத்தில் நேற்று சனிக்கிழமை கைச்சாத்திட்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலுக்கு பின்னர் கட்சிகளின் தலைவர்களால் புதிய கூட்டணி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

அந்தவகையில் பின்வரும் விடயங்கள் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்படுகின்றன.

மேற்கூறிய அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் ஒற்றுமையாகவும் கூட்டாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படும்.

மேற்கண்ட கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகளை உள்ளடக்கிய தேசிய செயற்குழு ஒன்று அமைக்கப்படும்.

இத்தேசியச் செயற்குழு, வடக்கு-கிழக்கு தமிழ் மக்களிற்கான முழுமையான அரசியல் தீர்வை நோக்கமாகக் கொண்டு, அதனை அடைவதற்கான அனைத்து வழிகாட்டல்களையும் நெறிமுறைகளையும் வகுத்து செயற்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்குழுவின் ஏகமனதான முடிவுகளுக்கும் தவறும்பட்சத்தில் அதன் பெரும்பான்மை முடிவுகளுக்கும் அங்கத்துவக் கட்சிகள் கட்டுப்படும்.

மேற்கண்ட கட்சிகளையும் தேவையேற்படின் ஏனைய கட்சிகளையும் உள்ளடக்கி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை பரந்துபட்ட வலுவான கட்டமைப்பாக உருவாக்க சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

தேர்தல் விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்ற பெயரிலும் அதன் சின்னமான குத்து விளக்கையும் கொண்டு செயற்படும்.

இதற்கான நிரந்தர ஒரு கட்டமைப்பை சாத்தியமான விரைவில் உருவாக்கும் வரை இதில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒவ்வொன்றிலிருந்தும் கட்சித் தலைவர்கள் உட்பட தலா மூவரைக் கொண்ட தேசிய செயற்குழு ஒன்று நிறுவப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற நடவடிக்கைகளையும் இந்த செயற்குழுவே வழிநடத்தும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவமானது கூட்டுத் தலைமைத்துவமாகவும் சுழற்சிமுறையிலான தலைமைத்துவமாகவும் அமையும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான முழுமையான யாப்பு உருவாகின்றபோது, இந்த விடயங்கள் ஆழமாகப் பரிசீலிக்கப்பட்டு உள்ளடக்கப்படும். (4-7,33)


# கண்ணீர் அஞ்சலி

கிளி/பளை மத்திய கல்லூரியின் ஆசிரியரான
திருமதி மோகனவனிதா தவேந்திரம்
அவர்களின் பாசமிகு மாமியாரான

அமரர் ஆழ்வாப்பிள்ளை மாருதி



அவர்கள் 13.01.2023 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம் (14266)
கிளி/பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)


## கிணற்றுக்குள்...

நுணாவில் சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 64 வயதான க.லட்சுமி என்ற பெண்மணியே இவ்வாறு கிணற்றுக்குள்தவறிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் உசாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7,30)

## நாட்...

வழிபாடு செய்கின்றோம் என ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க தனது பொங்கல் வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

கிழக்கின் தானியக் களஞ்சியம் என்று அழைக்கப்படும் இலங்கையில் உணவுப் பாதுகாப்பையும் போஷாக்கையும் உறுதிசெய்து தன்னிறைவு பெற்ற நாட்டைக் கட்டியெழுப்பும் அரசாங் கத்தின் முயற்சிகளுக்கான அர்த்தமுள்ள சந்தர்ப்பமாக இவ்வருட தைப்பொங்கல் பண்டிகையை நாம் கருதுவோம்.

விவசாயத்தை நவீனமயப்படுத்துவதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ள அதேவேளை சர்வதேச சந்தையின் போட்டித் தன்மைக்கேற்ப தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட வினைத்திறனுடனான இலாபகரமான விவசாயத்தை உருவாக்கவும் எதிர்பார்த்துள்ளது.

அரசாங்கத்தின் இப்புதிய பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்புத் திட்டத்திற்கு பங்களிப்பதன் மூலம் பொருளாதாரச் செழிப்புடைய நாட்டைக் கட்டியெழுப்ப அனைத்து இலங்கையர்களும் இந்த தைப் பொங்கல் தினத்தில் ஒன்றிணைய வேண்டுமென நான் வேண்டுகோள் விடுக்கின்றேன் என மேலும் தெரிவித்தார். (4-7)


ஓம் சிவாயநம
நாககன்னி அம்பாள் துணை



சித்தன்கேணி அருள்மிகு
ஸ்ரீ நாககன்னி அம்பாள் ஆலயம்



தைப்பொங்கல் தீ மிதிப்பு

15.01.2023 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணி

கிரியைகளை நிகழ்த்துபவர்
தேசமான்ய சாமஸ்ரீ சித்த ஞானகுரு இந்திரன் ஐயா
உதவிக்குரு தேவி உபாசகர் சுதா ஐயா

சைவச்சொற்பொழிவு
சைவ சின்மயர் க.நித்தியபாபுதரன்
அருட்சொல்வாரி சைவசித்தாந்த கலாநிதி வருணனைக் கலாநிதி
சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் J.P, M.A

விசேட மேளக்கச்சேரி
ஈழநல்லூர் பாலமுருகன் செந்தில் குழுவினர்
சித்தன்கேணி கண்ணன் குழுவினர்

சித்தஞானகுரு இந்திரன் ஐயாவும்
உபயகாரர்களும் தொண்டர்களும்

(C-5737)



# விற்பனைக்கு

யாழ்.பலாலியில் 160 பரப்புக் காணியும், 100 பரப்புக் காணியும், யாழ்.KKSஇல் 120 பரப்புக் காணியும் யாழ்.நிலாவரையில் 70 பரப்புக் காணியும், யாழ்.KKS வீதியில் சத்திரச்சந்திக்கு அண்மையில் 2 கடைகளும் உடன் விற்பனைக்குண்டு.

(14268)

தொடர்பு
077 723 2535


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புள்ளிகள் இணைந்து புதுக்கோலம் தோன்றுவதைப்போல
உள்ளங்கள் இணைந்து எம் நாட்டை அழகாக்கட்டும்!

# செலான் வங்கியின்
# தைத்திருநாள் வாழ்த்துக்கள்!

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

# சாரங்கா

1960 ஆம் ஆண்டு முதல் முன்னணியில் இயங்கும்

## நகை மாடம்



# சாரங்கா

நாணயமாற்று சேவை

WESTERN UNION MONEY TRANSFER

Ria MONEY TRANSFER

அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு நாணயமாற்று சேவை

- வெளிநாட்டு நாணயங்களுக்கு கூடிய விலை வழங்கப்படும்.
- பழைய நகைகளுக்கு கூடிய விலை.
- வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

**இல.157/1, கஸ்தூரியார் வீதி ,யாழ்ப்பாணம்.**

**021 222 6972, 021 222 8869**

**Hotline: 077 357 7212**

அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான

# றோயல் நெய்

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான **றோயல் நெய்** கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்.

ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.



Packed By:-
Royal Industries®
Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222 567

குறிப்பு
யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

# North Lanka IIT

CITY CAMPUS INTERNATIONAL COLLEGE

1. இலகுவாக பட்டச்சான்றிதழுக்கான உறுதிப்படுத்தல் சான்றிதழ் பெறுவதற்கான அங்கீகாரம்
2. உலகத்தரம் வாய்ந்த சான்றிதழ்
3. இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் (UGC)
4. IAU வின் அங்கீகாரம்
5. WHED யின் அங்கீகாரம்
6. UNESCO அங்கீகாரம்
7. Costa Rica வின் அங்கீகாரம்
8. தரம் வாய்ந்த பேராசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை

## கற்கை நெறிகள்

| | |
|---|---|
| 1. B.Sc in Computer Science | (3 Years) |
| 2. B.Sc in Computer Science | (01 Years Top-Up) |
| 3. MSc.in Computer Science | (1 Years) |
| 4. B.Sc in Physical Education & Sports | (1 Years Top-Up) |
| 5. B.Sc in Physical Education & Sports | (3 Years) |
| 6. B.Ed.Top-Up | (1 1/2 Years) |
| 7. MED | (1 Years) |
| 8. B.Sc in Agriculture Science | (3 Years) |
| 9. B.Sc in Agriculture Science | (Top Up 1 Years) |
| 10.B.Sc in Civil Engineering | (Top Up 1 Years) |
| 11.Post Graduate Diploma in Education | (1 Years) |

North Lanka IIT
Top Floor, People's Bank Building, Stanley Road,Jaffna

Matale Lanka City Campus
Mr.C. Jeevaratnam
614C, Main Street, Matale.

Vavuniya Lanka City Campus
Station Road, Vavuniya.

Lanka City Campus
Batticaloa.

# கிருபா லேணர்ஸ்

# KIRUBAA LEARNERS

කිරුබා ලර්නර්ස්

அரச அங்கீகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

# மயூரா உணவு வழங்கல் சேவை



சகல விதமான நிகழ்வுகளுக்குரிய காலை, மதிய, இரவு உணவுகள் உணவு வழங்கலுக்குரிய சகல வசதிகளுடன் பெற்றுக்கொள்ள

அல்லையம்பதி,
துன்னாலை, கரவெட்டி.
077 930 4363
075 991 8171

# மயூரா கூல்பார்

## மயூரா தொலைத்தொடர்பகம்



சிற்றுண்டி வகைகள், ஐஸ்கிரீம் வகைகள், தொலைபேசி மீள்நிரப்பல்கள், பத்திரிகை விளம்பரங்கள், பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள

அல்லையம்பதி,
துன்னாலை கரவெட்டி.
076 767 0760

C-5642

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனைவருக்கும்
வலம்புரியின்
பொங்கல் நல்வாழ்த்துக்கள்

ஓடர் நகைகளை உத்தரவாதத்துடன் அசல் 22 கரட்
நகைகளைத் தெரிவு செய்ய இன்றே
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

# பூரணி நகை மாடம்

## PURANE JEWELLERS

தங்கப் பவுண் நகை வியாபாரம்



இல.46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3121

# கொழும்பு எசன்ஸ் ஹவுஸ்

## Colombo Essence House



சகல விதமான எசன்ஸ் வகைகள், கேக் உற்பத்திப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

*Dealers in Essence, Perfumes, Cake Ingredients, Bakery Products and Cosmetics Products.*

C-5643

**133/7, K.K.S Road, Jaffna, Srilanka.**
**021 222 8463**

# DMI COMPUTER EDUCATION

CELEBRATING 15 YEARS ANNIVERSARY Since 2008



**IT , English , Vocational & skills development training**

யாழில் **No.1** ஆங்கிலப்பயிற்சி மையம்

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும்

**Diploma in English**
**Spoken English**

Reading Writing Speaking Listening

ENGLISH Foundation | ENGLISH Part-1 | ENGLISH Part-2

நேரடி வகுப்பு
புதிய பிரிவுகள் ஆரம்பம்
18/1/2023
பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்

Call now 0777173517

உங்கள் முழுமையான ஆங்கிலப்புலமைக்கு

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | |
|---|---|---|---|
| Mon,Wed,Fri- 8 :00 a.m.<br>Mon,Wed,Fri- 3:00 p.m.<br>Sat,Sun - 3:00 p.m. | Tue,Thu - 3:30 p.m.<br>Sat,Sun - 3:30 p.m. | Mon,Wed,Fri- 3 : 00 p.m.<br>Sat,Sun - 3 : 30 p.m. | கிளிநொச்சி Sat,Sun - 9:00 a.m.<br>சாவகச்சேரி Tue,Thu - 8:00 a.m.<br>சண்டிலிப்பாய் Wed,Fri - 3:30 p.m. |

**A1 IELTS Life Skills**
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

**B1 Skilled Worker Visa**
மூலம் வெளிநாடு செல்வோருக்கானது

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

## - IT Courses -

**Diploma in Information Technology**

- Office Automation
- PC Application
- Microsoft Office
- Web Designing, Hardware
- Video Editing, Mulitmedia
- AutoCAD, Java, C++, PHP

## IELTS

**Academic , General & UKVI**

- # Unique Test Tips
- # 40 hrs with free 4Mock exams
- # Latest course Material ( Book 17)

# DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் அருகாமை காளி கோவில் முன்பாக) | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) | No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) | சீரணிச்சந்தி | A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) |
| 021 226 2470<br>0777577333 | 021 227 0775<br>0777227074 | 021 224 1970<br>0776032300 | 021 225 6665<br>0761354503 | 021 228 5655<br>0776398096 |

வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

# C.S.K Herbals

## க.செ.கைலாசபிள்ளை அன்சன்ஸ்

(சத்திர சந்திக்கு அருகாமையில்)



ஆயுர்வேத மருந்துச் சரக்குகள், கோவில் அபிஷேக பொருட்கள், கும்பாபிஷேக பொருட்கள் அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

131 K.K.S Road, Jaffna.
**021 222 8092**

# சசிகா லேணர்ஸ் L

## THE SASIKA LEARNERS

Reg.No DS-882

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

உரிமையாளர் தொடர்புக்கு: 0777 226 247 / 0776 140 361

தலைமைக்காரியாலயம்:
**57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.**

கிளை நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| நெல்லியடி | சங்கானை | மல்லாகம் |
| சாவகச்சேரி | பண்டத்தரிப்பு | புன்னாலைக்கட்டுவன் |
| யாழ் மத்தி | காரைநகர் | வேலணை |




sasikadrivingschool@gmail.com www.sasikalearners.com Sasika Learners

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எவ் நிதி தாமதம்; மக்களுக்கே பெரும் பாதிப்பு

## இராஜாங்க அமைச்சர் செஹான்

(கொழும்பு)

**சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை தாமதப்படுத்திய இருதரப்பு கடனாளர்களிடமிருந்து கடன் உத்தரவாதங்களைப் பெற முடியாமல் போனமை மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் விரைவாக உடன்படிக்கைகளை எட்டுவதில் தாமதம் ஏற்பட்டதால், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் அனுமதி மற்றும் நிதி உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடனுதவியை பெற்றுக் கொள்வதற்க்கான பேச்சுவார்தைகள் தொடர்ந்தாலும் தொழில்நுட்ப விடயங்களில் காணப்படும் நிச்சயமற்ற தன்மையும், அனுமதி கிடைப்பதில் ஏற்படும் தாமதமும் மக்களிற்கு கடும் பாதிப்பை ஏற்படுத்துவதாக செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் பரஸ்பர புரிதல் மூலம், இந்த செயல்முறையின் இறுதி கட்டம் விரைவில் நடைபெறும் என தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டிற்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் பலதரப்பு கடன் வழங்கும் நிறுவனங்களின் கணிசமான தலையீடு அவசியம் என்றும் செஹான் சேமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (4)



# மதுபானம் ஏற்றுமதி 21 மில். டொலர் வருமானம்

(கொழும்பு)

இலங்கை மதுபான வகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் கடந்த வருடத்தில் மட்டும் நாட்டிற்கு 21 மில்லியன் டொலர் வருமானமாக கிடைத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

எமது நாட்டு உற்பத்தியான மதுபானம் உலகின் 35 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள அவர், அதன் மூலம் அரசாங்கத்திற்கு வருடாந்தம் பெரும் வருமானம் கிடைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க கடந்த 2021 ஆம் ஆண்டு மதுபான ஏற்றுமதி மூலம் 20 மில்லியன் டொலர்களையும் கடந்த வருடத்தில் 21 மில்லியன் டொலர்களையும் வருமானமாக பெற்றுக் கொண்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து மேற்படி நாடுகளுக்கு சாராயம், தென்னஞ்சாராயம், பனங்கள்ளு போன்ற மதுபான வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். தென்னங்கள்ளு மற்றும் கித்துள் கள்ளு ஆகியவற்றுக்கு உலகின் பல்வேறு நாடுகளிலும் சிறந்த கேள்வி நிலவுவதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# மின்கட்டண திருத்தம் கருத்து கணிப்பு ஆரம்பம்

(கொழும்பு)

புதிய மின் கட்டண திருத்தம் தொடர்பில் மக்களின் கருத்துகளை கேட்டறிவதற்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 7ஆம் திகதி வரை மக்கள் கருத்துக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் முதல் கட்டமாக மக்கள் தமது கருத்துகளை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்க முடியும் என்பதோடு, அதன் பின்னர் மக்களிடம் நேரடியாக கருத்துகள் கேட்டறியப்படவுள்ளதாகவும் பொதுபயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (4)

# சீன கம்யூனிஸ கட்சி நாட்டை வந்தடைந்தது

(கொழும்பு)

சீன கம்யூனிஸ கட்சியின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சீன சர்வதேச திணைக்களத்தின் பிரதியமைச்சர் சென்ஸோ தலைமையிலான இந்த உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினர் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை வரை நாட்டில் தங்கியிருப்பர்.

சீன கம்யூனிஸ கட்சியின் 20 ஆவது தேசிய காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாண்டில் அக்கட்சிப் பிரதிநிதிகள் வெளி நாடொன்றுக்கு மேற்கொள்ளும் முதலாவது உத்தியோக பூர்வ விஜயம் இதுவாகும்.

இவ்விஜயத்தின்போது சீன கம்யூனிஸ கட்சிப் பிரதிநிதிகள் இலங்கையின் உயர் மட்ட அரச தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்திப்பதற்கு எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# தமிழ் மக்களின் துன்பங்கள் நீங்க தைத்திருநாள் வழிவகுக்க வேண்டும்

## அகில இலங்கை இந்துமா மன்றம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் கடந்த காலங்களில் அனுபவித்து வந்த எல்லா விதமான இன்னல்களும் முற்றாக நீங்கி, அவர்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வொன்றின் மூலம் அவர்களது வாழ்வில் மகிழ்ச்சியும் நிம்மதியும் விமோசனமும் கிடைப்பதற்கு மலரும் தைத்திருநாள் வழிவகுக்க வேண்டும் என அகில இலங்கை இந்துமா மன்றம் தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.

தமிழர் திருநாள் தைப் பொங்கல் அறுவடைத் திருநாள் எனக் கூறப்படும் பொங்கல் பண்டிகை. தமிழர் பண்டிகையாகும்.

பொங்கல் என்பதற்கு சாப்பிடும் பொங்கல் என்பது அர்த்தம் ஆகாது. பொங்கிப் பெருகி வருவது எனப் பொருள்படுவதே அதன் சாராம்சம்.

தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் பொங்கல் விசேடமாகக் கொண்டாடப்படுகிறது.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற பாரம்பரிய சொற்றொடரின் படி புதிய எதிர்பார்ப்புக்களையும் நம்பிக்கைகளையும் வைத்து தைத் திருநாள் வரவேற்கப்படுவது வழக்கம்.

மலரும் தைத்திங்களும் அவ்விதமாகவே அமைய வேண்டும் என்பதே இந்து மக்களது விருப்பமாகும்.

நாட்டின் இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் குறிப்பாக தமிழ் மக்களது துன்பகரமான நிலைமையை உணர்ந்து அவர்களது விமோசனத்திற்காக இந்து மக்கள் அனைவரும் தைத் திருநாளன்று இறையருள் வேண்டிப் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என அகில இலங்கை இந்துமா மன்றம் கேட்டுக்கொள்கிறது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# நவீன இலத்திரனியல் நுழைவாயில் கட்டுநாயக்க விமான நிலையத்தில்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

உலகிலுள்ள மேம்பட்ட விமான நிலையங்களைப்போன்று, கட்டுநாயக்க விமான நிலையத்திலும் இலத்திரனியல் நுழைவாயில் வசதிகளை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் விமான நிலைய மற்றும் விமான நிறுவன அதிகாரிகளுக்கு இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

முதற்கட்டமாக, வருகை முனையத்தில் இரண்டு வாயில்களையும், புறப்படும் முனையத்தில் இரண்டு வாயில்களையும் நிறுவ அறிவுறுத்தப்பட்டது.

குறைந்த செலவில் நாட்டுக்கு சாதகமான வகையில் இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு தேவையான கொள்வனவு மற்றும் சட்ட அனுமதிகளை துரிதப்படுத்துமாறு அமைச்சர் மேலும் ஆலோசனை வழங்கினார்.

IOM என்ற அமைப்பு இந்த திட்டத்திற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை வழங்கும் எனவும் அதற்கு ஒரு வருடம் ஆகும் என்பதும் இங்கு தெரியவந்தது.

அதன்படி, IOM அமைப்பின் நிதியுதவியுடன் இந்தத் திட்டம் முடிக்கப்பட வேண்டும் எனவும் அதுவரை விமான நிறுவனத்தின் நிதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுக்கோரல் நடைமுறைகளின் கீழ் இது ஒரு முன்னோடித் திட்டமாக நிறுவப்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (4)

# தேர்தல் கடமைகளில் பொலிஸார் ஈடுபடுவதில் நெருக்கடி நிலை

## பொலிஸ் திணைக்களம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலின் போது கடமைகளில் ஈடுபடுவதில் நெருக்கடி நிலை காணப்படுவதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருடன் அண்மையில் நடத்தப்பட்ட சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத் தேர்தல் நடத்தப்பட்ட காலத்தில் பொலிஸாருக்கு செலுத்தப்பட வேண்டிய ஒரு பில்லியன் ரூபா பணம் இதுவரையில் கிடைக்கவில்லை என பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரட்ன, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரிடம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துவது சிரமமானது எனக் குறிப்பிட்டுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

நாதம் 379

Viber 076 636 3378





தமிழ் அரசியல் புலம் ஒன்றுபட்டு விடக்கூடாது என திரை மறைவில் தீவிரம் காட்டும் அரச தரப்புக்கு வெற்றி; ஒன்றுபட மாட்டார்களா என ஏங்கிய தமிழினத்துக்கு படுதோல்வி.

• அபிமன்யு

# ஒன்றுப(ட்)டோம்

**தை** பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். இன்று தைமகள் பிறக்கிறாள். இனி தமிழினத்துக்கு நல்லதே நடக்கும் என நம்பிக்கை கொள்வோமாக.

ஏனெனில் ஆட்சியாளர்களைத் தொடர்ந்து நம்பிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் தலைமையின் கையறு நிலையை தமிழினம் நன்கு அறிந்திருக்கிறது.

கையறு நிலை என்பதிலும் அரசியல் ஞானம் இன்மை என்பது தான் உண்மை.

தமிழ் தரப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து நிக்கவேண்டும் என்பதே தமிழினத்தின் விருப்பம்.

அதற்காகவே இன்றுவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்கள் ஆதரித்து வருகின்றார்கள் என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதை உணர்ந்து கொள்ளாமல் எல்லாம் எம்மால் தான் என்ற மமதை மேலோங்கினால் அது அழிவிலேயே முடியும்.

தமிழ் மக்களின் விருப்பத்துக்கு எதிராக எவரும் செயற்பட்டுவிடக் கூடாது என்பதில் தெளிவுற இருப்பதே நன்மை.

ஏனெனில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் அதன் நோக்கம் என்பன தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளை வெல்வதற்கானது என்பதை தமிழினம் நெஞ்சுறுதியுடன் நினைவு கூருகின்றது.

2009 வரை மிகப் பலம் பொருந்தியதாய் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் பின் பலம் இழந்தது என்பது வரலாறு.

ஆயினும் தன்னை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி எனக் கூறிக் கொள்வதில் அது பின் நிற்கவில்லை.

அத்துடன் வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்திப்பதில் இருந்து அரச தலைவர்களைச் சந்திப்பது வரை தாமே முதன்மையானவர்கள் என்பதில் தீவிரம் காட்டினர். அதில் வெற்றியும் கண்டனர் என்பது தான் உண்மை.

ஆம், நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பாரிய பின்னடைவைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழி தவறி பயணிக்கிறதோ எனும் எண்ணப்பாட்டை தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்கியிருந்தது.

அதன் விளைவே அது வீழ்ச்சி கண்டதாய் மக்கள் கருதினர்.

இதற்குப் புடம் போடுவது போல கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், மற்றும் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் ஆகியோருக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்ததுடன் ஆளும் அரச தரப்பில் இருந்து அங்கஜன் இராமநாதன் பாராளுமன்றம் தெரிவாகி வரலாற்றுச் சாதனை படைத்திருந்தார்.

இவ்வாறு வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமிழந்த போதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்க்ளின் ஏகபிரதிநிதிகள் என்பதில் உறுதியாக இருந்தனர்.

தமிழினத்துக்கான தீர்வு விடயத்தில் தமிழ் கட்சிகளை ஒன்றிணைந்து சந்திப்பதாக அரசு அறிவித்திருந்தாலும் அரசாங்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை மாத்திரமே சந்தித்திருந்தது.

இது தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய பங்காளிக் கட்சிகளைப் புறந்தள்ளி தமிழரசுக் கட்சியினரை ஜனாதிபதி சந்தித்ததனூடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாட்டை ஏற்படுத்த அரசு முயற்சிக்கிறதா என தமிழ் மக்கள் சிந்தித்தனர்.

அதை நிரூபிக்கும் வகையில் யாரும் எதிர்பாராத ஒரு முடிவை தமிழ்த் தேசிக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சியான தமிழரசுக் கட்சி, நடைபெறப் போகும் உள்ளூராட்சி தேர்தலில் தனித்துப் போட்டியிட உள்ளதாக அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்பு தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பது உண்மை.

ஏனெனில் குறித்த அறிவிப்பு வெளியிடுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜா தலைமையில் யாழ்ப்பாணத்தில் அனைத்து தமிழ்கட்சியையும் ஒன்றிணைத்து எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்ளும் நோக்குடனான சந்திப்பு நடைபெற்றிருந்தது.

எனின், குறித்த தமிழரசுக் கட்சியின் முடிவு யாருடையது? யாருக்கானது? என்கின்ற கேள்வியும் தமிழினத்திடத்தே எழுந்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் குறித்த முடிவுக்கு ஆட்சேபனை தெரிவித்த ஏனைய பங்காளிக் கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்த பிரிந்து நிற்கும் ஏனைய தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்க முற்பட்டிருந்தனர்.

குறித்த ஒன்றிணைப்பு முயற்சியில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் முன்னாள் யாழ்.மாநகர மேயர் மணிவண்ணன் ஆகியோர் வெளியேறியிருந்தனர்.

ஆயினும் ரெலோ, புளோட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பன ஒன்றுபட்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

எது எவ்வாறோ தமிழ் மக்களின் விருப்பம் அனைவரும் ஒன்றிணைந்து நிற்க வேண்டும் என்பது. அரசாங்கத்தின் விருப்பம் தமிழ் அரசியல் தளத்தில் ஒற்றுமைக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பது.

ஆக இதில் வெற்றி பெற்றது பெரும்பான்மை அரச தரப்பு என்பதே முடிவாகிறது.

தைபிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள். பொறுத்திருந்து பார்ப்போம் மக்கள் தீர்ப்பு எவ்வாறு அமையப் போகிறது என்பதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## மன்னார் ஆயர் இல்லத்தில் கூட்டம்
## இந்தியாவுக்கு விழுந்த அடி

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். இன்று தைப்பொங்கல். தமிழர் திருநாள். அனைவருக்கும் எங்களின் தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறக்கின்ற தை மாதத்திலாவது தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்க வேணும் எண்டு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இவ்வாறு கூறியபடி பண்டிதர் அமர்ந்தார்.

**விதானையார்:** அது சரி இன்று யாழ்ப்பாணத்தில நடக்கிற தேசிய தைப்பொங்கல் விழாவை எதிர்ப்பதென யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் அறிவித்திருக்கினம். இதைப்பற்றி என்ன நினைக்கிறியள்.

விதானையார் விசுவலிங்கம் எடுத்த எடுப்பில இப்படியொரு கேள்வியைக் கேட்க, ஆலடியில சிறிதுநேரம் மௌனம் நிலவியது.

மௌனத்தைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:** எங்கட மண்ணில இப்ப நல்லது கெட்டது சொல்லுறதுக்கு ஆளில்லை. ஏதேனும் சொல்லப்போய் வில்லங்கத்தை விலைக்கு வேண்டுறதாய்ப் போயிடும் என்பதால, எங்கட புத்திஜீவிகளும் நிலைமையைத் தெரிந்து கொண்டவர்களும் நேர்மையானவர்களும் ஒதுங்கிக் கொண்டிருக்கினம்.

அதனால எதிர்விளைவுகளைப் பற்றி சிந்திக்காமல், எதிர்ப்பு என்ற போர்வையில வில்லங்கம் நடந்தாகிறது.

**பண்டிதர்:** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. இராமபிரான் அவதாரமாக இருந்த போதிலும் கூனியின்ர முதுகில மண் உருண்டை கொண்டு எறிந்ததால தானே, பட்டாபிஷேகம் தடைப்படவும் இராமர் காடேகவும் அதனைத் தொடர்ந்து நெடுந் துன்பம் நடக்கவும் காரணமாயிற்று.

**கங்காணி:** உண்மைதான். ஒருக்கா மகிந்த ராஜபக்ஷ வடமராட்சிக்கு வந்த போது, அவருக்கு விளக்குமாறு காட்டின ஒரு சம்பவம் நடந்தது.

அதெல்லாம் பழிதீர்க்கிற மன நிலையை சிம்பிளா ஏற்படுத்திப் போட்டுது. ஆகையால இப்ப இருக்கிற ஒரு சுமுகமான சூழ்நிலையை நாங்கள் பழுதாக்கினதாக ஆரும் கருதாத வகையில நடந்து கொள்கிறதுதான் எல்லாருக்கும் நல்லது.

**சாத்திரியார்:** எனக்கெண்டால் நீங்கள் சொல்லுறது ஒண்டும் விளங்கல்ல.

**விதானையார்:** சாத்திரியார் இப்ப ஒரு சமாதான முயற்சி நடக்குது. இந்த சமாதான முயற்சி என்பது இலங்கை ஆட்சியாளர்களால ஏற்படுத்தப்படவில்லை. மாறாக, சர்வதேச சமூகம் குடுக்கிற அழுத்தத்தில தான் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற கட்டத்திற்கு அரசாங்கம் வந்திருக்குது.

இந்த இடத்தில எங்களுக்குச் சாதகமாக ஏற்பட்டுள்ள சூழமைவை நாங்கள் பயன்படுத்திக் கொள்ள வேணும். பொதுவில, தங்களால ஏற்படுத்தப்படுகிற சூழமைவைத் தமிழ் மக்கள் பயன்படுத்தத் தவறிவிடுகினம் என்ற கருத்து உலக நாடுகளிட்ட இருக்குது.

இந்த நிலையில தேசிய தைப்பொங்கல் விழா, யாழ்ப்பாணத்தில நடப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறதென்பது எத்துணை புத்திசாலித்தனமானது என்பதை ஒருக்கா நாங்கள் பார்க்க வேணும்.

**மூப்பர்:** எங்கட பிரச்சினையைத் தீர்க்காமல் இஞ்ச தேசிய தைப்பொங்கல் விழா நடக்கிறதை எப்படி நாங்கள் ஏற்க முடியும்.

**வாத்தியார்:** மூப்பர் கேட்கிற கேள்வியில நியாயம் இருக்கத்தான் செய்யுது. இருந்தும் எங்களின்ர எதிர்ப்பை உலக நாடுகள் நிச்சயம் அவதானிக்கும்.

இந்தாப் பாருங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் கோட்டாவுக்கும் கனடா தடை விதித்திருக்குது. இது உலக நாடுகள் இன்னமும் இலங்கை விவகாரத்தைக் கைவிடவில்லை என்பதைத் தான் சுட்டி நிற்கிறது.

ஆகையால யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டம் என்று நடத்தாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேவை, இராணுவம் ஆக்கிரமித்த காணிகளை விடுவிக்க வேண்டும், தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும், காணாமல் போன எங்கள் உறவுகளுக்கு நடந்தது என்ன? உங்களின் சமாதான முயற்சியை வரவேற்கிறோம் என்பதாக எங்கட கோரிக்கைளை முன்வைத்தால், அந்த இடத்தில பல்கலைக்கழக மாணவர்களை ஜனாதிபதி ரணில் சந்திக்கின்ற வாய்ப்பும் சில வாக்குறுதிகளை வழங்குகின்ற சந்தர்ப்பமும் ஏற்படலாம்.

ஆகையால, இது பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சிந்திக்க வேணும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

**சிறாப்பர்:** இப்ப எங்கட மண்ணில மதவாதம் கடுமையாகத் தூண்டப்பட்டு வருகிறது. இந்தாப் பாருங்க, மன்னார் மாவட்ட மக்களின்ர பிரச்சினைகள் தொடர்பில மன்னார் ஆயர் இல்லத்தில வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில ஒரு கூட்டம் நடந்திருக்குது. மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்குகிற பிரச்சினைகளை மன்னார் ஆயர் இல்லத்தில கூடி ஆராய வேண்டிய தேவை என்ன?

**விதானையார்:** சிறாப்பர் இதுக்குள்ள பெரும் அரசியல் இருக்குது. மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தை இந்திய மத்திய அரசு புனரமைத்துக் கும்பாபிஷேகம் செய்ததல்லோ. இந்த இடத்தில இந்தியாவுக்குத் தங்கட எதிர்ப்பைக் காட்ட வேணும் எண்டு வடக்கு மாகாண ஆளுநரும் மன்னார் மறை மாவட்ட ஆயர் இல்லமும் சேர்ந்து நடத்திய நாடகம் தான் மன்னார் ஆயர் இல்லத்தில நடந்த கூட்டம் என்பது என்ர கருத்து.

**பண்டிதர்:** அதெண்டால் உண்மைதான். ஆயர் இல்லத்தில நடந்த கலந்துரையாடலுக்கு மன்னார் திருக்கேதீச்சர ஆலய பரிபாலன சபைக்கோ அன்றி ஆலய சிவாச்சாரியாருக்கோ அழைப்பு விடுக்கப்படவில்லையாம்.


அப்ப இந்தியாவுக்கு எதிராக மன்னார் ஆயர் இல்லத்தில நடத்தின கலந்துரையாடல் தான் இது என்று அனுமானிப்பதில எந்தத் தவறும் இல்லை என்பது தான் என்ர வாதமும்.

**மூப்பர்:** அப்ப இந்த விபரம் ஜனாதிபதி ரணிலுக்குத் தெரியுமோ.

**வாத்தியார்:** ஜனாதிபதி ரணிலுக்குத் தெரியாவிட்டாலும் பிரதமர் மோடி, திருக்கேதீச்சரத்தைப் புனரமைத்துக் கும்பாபிஷேகம் செய்தாலும் மன்னார் மாவட்ட நிர்வாகம் எங்களிட்டத் தான் இருக்குது. இஞ்ச இந்தியாவோ அல்லது பிரதமர் மோடியோ வாலாட்ட முடியாதென்ற செய்தியை மன்னார் மறை மாவட்ட ஆயர் இல்லம் மிகத் தெளிவாக இந்தியாவுக்குச் சொல்லியிருக்குது.


**சிறாப்பர்:** அது மட்டுமல்ல, வடக்கு மாகாண ஆளுநரும் எங்கட கட்டுப்பாட்டில தான் இருக்கிறார் என்ற தகவலை யாழ்ப்பாணத்தில இருக்கிற இந்தியத் துணைத் தூதரகத்திற்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் இல்லம் நாசுக்காக தெரியப்படுத்தியும் இருக்குது.

இவ்வாறு சிறாப்பர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.



**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தமிழ் தலைவர்களுக்கு திடீரென தமிழ் மக்கள் மீது அக்கறை வரக் காரணம் என்ன வியாசரே?**







**தமிழ்க் கட்சிகள் ஒன்று சேரும் என்று பார்த்தால் தமிழரசுக்கட்சி குறுக்கே இழுத்து விட்டதே?**

**ரிதுஷ் — யாழ்ப்பாணம்**

**எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?**

தமது சுயநலனுக்காக சொந்த இன மக்களை ஏமாற்றும் ஈனர்களை கடவுள் மன்னிக்கவே மாட்டார்.

எவ்வளவு சூட்சியைச் செய்து தாம் நினைத்ததை நடத்தி விட்டதாய் கோட்டை கட்டலாம். ஆனால் அந்தக் கோட்டை மண் கோட்டையே. கடவுளின் தீர்ப்புக்கு முன் அவர்கள் நின்றே ஆக வேண்டும்.

அவ்வாறு நிற்கும் போது அவர்கள் கட்டிய மணல் கோட்டை இடிந்து வீழ்வதை அவர்கள் தங்கள் கண்களால் பார்ப்பார்கள்.

அதன் பின்னராவது அவர்களுக்கு புத்தி வருமா என்றால் இல்லை என்பதே உண்மை.

**பிரியன் — கிளிநொச்சி**

**உச்சி மாநாட்டுக்குச் செல்வதால் நாட்டுக்கு ஏதும் நன்மை பயக்குமா வியாசரே?**

நாடு கடனின் உச்சியில் நிற்கிறது. இந்த நேரத்தில் உச்சி மாநாடு என்ன உச்ச மாநாடு நடத்தினாலும் எதுவும் வேலைக்கு ஆகாது தம்பி.

பசித்தவனுக்கு சோறு கொடுத்து விட்டுத் தான் அவனிடம் சுகநலம் விசாரிக்க வேண்டும்.

மக்கள் இங்கு பட்டினி கிடந்து சாகிறார்கள். இந்த நேரத்தில் இதைச் செய்து என்னத்தை சாதிக்க போகிறார்களோ?

எல்லாம் அந்தத் தில்லைக் கூத்தனின் திருவிளையாடலே.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**தமிழ்க் கட்சிகள் ஒன்று சேரும் என்று பார்த்தால் தமிழரசுக்கட்சி குறுக்கே இழுத்து விட்டதே?**

தமிழ் மக்களின் விருப்பம் எது என்று தெரியாமல் செயற்படுபவர்களை தமிழ் மக்கள் ஏற்பார்களா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

முதலில் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து தனி வழி சென்றதற்கான காரணத்தை தமிழரசுக் கட்சி தமிழ் மக்களிடம் கூற வேண்டும்.

ஏனெனில் தமிழ் மக்களின் வாக்குகளால் பாராளுமன்றம் சென்றவர்கள் அங்கும் இருக்கிறார்கள். அதை தெளிவுபடுத்த வேண்டியது அவர்களின் தார்மீக பொறுப்பு.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**ஜெயரூபன் — பருத்தித்துறை**

**தங்களைப் பெண்கள் அழகன் என்று சொன்னால் உடனே என்ன செய்வீர்கள் வியாசரே?**

உண்மையைச் சொன்னால் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும். அதில் வியாசர் என்ன விதிவிலக்கா?

ஆள்பாதி ஆடைபாதி என்பார்கள் உண்மையில் அழகு என்பது முகத்திலோ நிறத்திலோ உடுக்கும் உடையிலோ என்பதற்கு அப்பால் மனதிலேயே உண்டு. அகத்தில் எது இருக்கிறதோ அதுவே முகத்தில் தெரியும்.

**ராஜ் — முகமாலை**

**இலங்கை அரச தலைவர்களுக்கு கனடாவின் தடை எப்படிப்பட்டது?**

இந்தியாவின் இரட்டை முகத்துடன் ஒப்பிடும் போது கனடாவின் ஒற்றை முகம் தமிழருக்கு நிம்மதியைத் தந்திருக்கிறது.

கனடாவின் குறித்த அரச தலைவர்களுக்கான தடை என்பது தமிழினத்துக்கு துரோகம் இழைத்தவர்களின் முகத்தில் பூசிய கரி. இந்தக்கரியை அவ்வளவு சுலபமாக அழித்து விட முடியாது. ஏனெனில் இது உலக வரலாற்றில் பொறிக்கப்பட்டு விட்ட கரிப்பூசல் ஆதலால் அதை தமிழினம் வரவேற்கிறது.

**ஜெயமோகன் — கொக்குவில்**

**சீதை கண்ட புள்ளிமான் மாயமான் அல்லவா வியாசரே?**

மாயமானைக் கண்டு மயங்கியது சீதை மட்டுமல்ல தமிழினமும் தான். தேர்தல் காலம் நெருங்குகிறது அல்லவா? இனி எம் பிரதேசங்களில் பல மாயமான்களைக் காணலாம்.

அந்த மாயமான்கள் பல மாயாயாலங்களை நிகழ்த்துவர். அந்த மாயாயாலத்தில் மயங்கி எம்மவர்களும் ஓட்டு போடுவர்.

அதன் பின் அந்த மாயமான்கள் மறைந்து விடும். கொழும்பில் ஒளிந்துவிடும்.

அடுத்த தேர்தல் அறிவிப்பு வந்ததும் பறந்து வருவர் மக்களை மயக்க.

**சுதன் — குப்பிழான்**

**கூட்டமைப்பில் இருந்து தனி வழி சென்ற தமிழரசுக்கட்சியினால் ஒரு தனி அரசை உருவாக்க முடியுமா?**

இத்துடன் விளையாட்டுச் செய்திகள் நிறைவு பெறுகின்றன.

நீங்கள் கேட்டதுக்கான பதில் கிடைத்து விட்டதா?

தமிழ் மக்கள் விரும்புவது எல்லாம் ஒற்றுமை என்ற ஒன்றை மாத்திரமே.

இவ்வளவு காலமும் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் ஒற்றுமை என்ற ஒன்றுக்காகவே கூட்டமைப்பு வெற்றிவாகை சூடி நின்றது.

மக்கள் விருப்பத்துக்கு முரணாக நடப்பவர்களை மக்கள் நிச்சயம் நிராகரிப்பர்.

பொறுத்திருந்து பார்ப்போம் தமிழரசுக் கட்சியின் தனி வழியை மக்கள் விரும்புகிறார்களா? வெறுக்கிறார்களா? என்பதை.

**மதுவன் — மீசாலை**

**தமிழ் தலைவர்களுக்கு திடீரென தமிழ் மக்கள் மீது அக்கறை வரக் காரணம் என்ன வியாசரே?**

தேர்தல் திருவிழா தொடங்கி விட்டதல்லவா இனி அவர்களுக்கு தமிழ் மக்கள் மீதுள்ள பாசம் பொங்கு பொங்கென்று பொங்கும்.

கொதிக்க வைத்தால் பால் பொங்கும் என்பதற்காக பச்சைத்தண்ணீர் பொங்குமா?

இல்லையே. இவர்களின் தமிழ் மக்கள் மீதான அன்பு என்பதும் பச்சைத்தண்ணீரை பொங்க வைப்பதற்கு சமமானதே. இறைவனை நோவதை விட தமிழினம் வேறு எதைச் செய்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: வருசம் பதினாறு
இசை: இளையராஜா
பாடியவர்: பி. சுசீலா



பொங்கல பொங்கல வைக்க
மஞ்சள மஞ்சள எடு
தங்கச்சி தங்கச்சி தங்கச்சி..

புஞ்சையும் நஞ்சையும் இந்த
பூமியும் சாமியும் இனி
நம் கட்சி நம் கட்சி நம் கட்சி..

பூப்பூக்கும் மாசம் தை மாசம்
ஊரெங்கும் வீசும்
பூ வாசம்

சின்னக்கிளிகள் பறந்து ஆட
இன்று கவிகள் குயில்கள் பாட

புது ராகம் புது தாளம்
ஒன்று சேரும் நேரம் இந்நேரம்

வாய்க்கலையும் வயற்காட்டையும்
படைத்தான் எனக்கென கிராம தேவதை
தெம்மாங்கையும் தெருக்கூத்தையும்
நினைத்தால்
இனித்திடும் வாழும்நாள் வரை
குழந்தைகள் கூட குமரியும் ஆட
மந்தமாருதம் வீசுது
மலையமாருதம் பாடுது

நான் தூங்கியே நாளானது
அது ஏன்...
எனக்கொரு மோகம் வந்தது.
பால்மேனியும் நூலானது
அது ஏன்...
அதுக்கொரு தாகம் வந்தது
மனதினில் கோடி
நினைவுகள் ஓடி
மன்னன் யாரெனத் தேடுதோ
உன்னைப் பார்த்ததும் கூடுதோ

# தை பிறந்தால் வழி பிறக்கும்

**தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தமிழ் மாதங்களில் தனிச்சிறப்பு வாய்ந்த மாதங்களில் முக்கியமானது தை. தை மாதத்தின் பிறப்பை அறுவடைத் திருநாளாக பொங்கல் தினமாக உலகத் தமிழினம் கொண்டாடி வருகிறது.**

தமிழர் திருநாள்... தைப் பொங்கல், அறுவடைத் திருநாள் என கூறப்படும் பொங்கல் பண்டிகை, தமிழர் பண்டிகை ஆகும். பொங்கல் என்பதற்கு சாப்பிடும் பொங்கல் என்று பொருள் அல்ல. பொங்கிப் பெருகி வருவது என்று பொருள். தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் பொங்கல் விசேஷமாக கொண்டாடப்படுகிறது.

1ஆவது நாளான பொங்கல், விசேஷமானது. தை மாதப் பிறப்பு நாள் இது. சர்க்கரைப் பொங்கல் என்று இந்த பண்டிகைக்குப் பெயர். புதுப்பானை எடுத்து, மஞ்சள் உள்ளிட்டவற்றை பானையைச் சுற்றிக் கட்டி, புதுப் பாலில், புது அரிசியிட்டு, வெல்லம் உள்ளிட்டவற்றைக் கலந்து பொங்கலிடுவார்கள். வீட்டுக்கு வெளியே சூரியன் இருக்கும் திசையை நோக்கி இந்த பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெறும். அரிசி நன்கு சமைந்து, பொங்கி வரும்போது குலவையிட்டும், பொங்கலோ பொங்கல், பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக என்ற குரலோடு பொங்கல் பானையை இறக்க வேண்டும். நன்கு பொங்கி வந்தால் அந்த ஆண்டு முழுவதும் நல்ல வளமும் நலமும் நிலவும் என்பது ஐதீகம். மாட்டுப் பொங்கல்.

2 ஆவது நாள் விழா மாட்டுப் பொங்கல். கிராமங்கள் தோறும் மாட்டுப் பொங்கல் விமரிசையாக கொண்டாடப்படும். வீடுகள் புதுப் பூச்சு காணும். மாடுகள், பசுக்களின் கொம்புகளுக்கு புது வர்ணம் பூச்சி, நன்கு குளிப்பாட்டி, அவற்றை அலங்காரம் செய்து, மாட்டுப் பொங்கல் தினத்தின் போது படையலிட்டு வழிபாடு செய்வார்கள்.

பின்னர் மாடுகளுக்கு பொங்கலும் அளிக்கப்படும். ஆண்டெல்லாம் நமக்காக உழைக்கும் மாடுகளுக்கு நன்றி



கூறும் தினமாக இது கொண்டாடப்படுகிறது. இன்றைய தினத்தின் போது மாடுகளுக்கு ஒரு வேலையும் தர மாட்டார்கள்.

கழுத்தில் புது மணி கட்டி, கொம்புகளை சீவி விட்டு சுதந்திரமாக திரிய விடுவார்கள். இந்த இடத்தில்தான் ஜல்லிக்கட்டு தோன்றியிருக்கிறது.

மாட்டுப் பொங்கலின் போது கிராமங்கள் தோறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம்.

இப்படியாக பொங்கல் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

பொங்கல் பண்டிகையின் மூன்று முக்கிய அம்சங்கள், கரும்பு, ஜல்லிக்கட்டு, இனிப்புப் பொங்கல் தான்.

இவை இல்லாமல் பொங்கல் நிறைவடையாது. கரும்புகளுக்கு பொங்கல் பண்டிகையின் போது தான் செமகிராக்கி. இன்று முழுவதும் கரும்பு சாப்பிடுபவர்களும் இருக்கிறார்கள். அதேபோல பொங்கல் பண்டிகையின் போது கிராமங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளும் விசேஷமானவை. அலங்கா நல்லூர், பாலமேடு, காஞ்சரம் பேட்டை ஆகியவை ஜல்லிக்கட்டுக்கு பெயர் போணவை இதில் அலங்கா நல்லூர் உலகப் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு களமாகும். தமிழர்களின் திருநாளாக, உழவர் திருநாளாக கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையை, தமிழக அரசு தமிழ்ப் புத்தாண்டு தினமாகவும் அறிவித்துள்ளதால், தமிழர்கள் அனைவரும் இந்த இனிய நாளை, இரட்டிப்பு சந்தோசத்துடன், தித்திப்புடன் கொண்டாட வாழ்த்துவோம். அதேசமயம், பல்வேறு பகுதிகளில் தமிழர்கள் பட்டு வரும் பல்வேறு அவதிகள் ஒழிந்து, வரும் ஆண்டில் எல்லா வளமும் நலமும் பெற்று அமைதியுடன் வாழவும் சூரியக் கடவுளைப் பிரார்த்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயக நிலத்திலிருந்து போர் வெம்மையால் புலம்பெயர் தேசங்களுக்குச் சென்ற எம்மவரின் இரண்டாம் தலைமுறையினர் பெரும் பாய்ச்சல்களை நிகழ்த்துகின்றனர். அரசியல், வியாபாரம், கல்வி, சினிமா, கலைகள் என அவர்களது பாய்ச்சல்கள் தொடர்கின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த கவிதரன் கலையம்சன் சுவிட்சலாந்து நாட்டில் பெரும் சாதனை ஒன்றை நிகழ்த்தி உள்ளார்.

**Swiss "OSTSCHWEIZER KURZFILMWETTBEWERB 2022" 12** ஆவது தடவையாக நடத்திய குறும்பட போட்டியில் பங்குபற்றிய 70 குறும்படங்களில் 6 குறும்படங்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகின.

இதில் கலையம்சன் தயாரித்து நடித்த **" NO WAR "** எனும் குறும்படமும் ஒன்று. செங்காளன் மாநிலத்தில். உள்ள **Cinema Palace** திரையரங்கில் காட்சிப்படுத்தப்பட்டு கலையம்சனின் **"No War "** குறும்படம் சிறப்பு அங்கீகாரத்தை பெற்றது.

படத்தின் கதையைப் பார்ப்போம். அது ஒரு பாடசாலை. அங்கு பல நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்கின்றனர். பாடம் நடத்தும் ஆசிரியர் டாச் மொழியில் சுதந்திரம் என்ற சொல்லை எழுதுகின்றார்.

அச் சொல்லை மாணவர்கள் தங்கள் தங்கள் நாட்டு மொழிகளில் எழுதுமாறு கூறுகின்றார்.

முதலில் ரியூனிசிய நாட்டு மாணவி எழுந்து சென்று தனது தாய் மொழியில் சுதந்திரம் என்ற சொல்லை எழுதுகின்றார். பின்னர் தாய்லாந்து நாட்டு மாணவி ஒருவர் எழுந்து சென்று தனது தாய் மொழியில் எழுதுகின்றார்.

# புலத்தில் இரண்டாம் தலைமுறையின் பாய்ச்சல்

அரேபியா, ஒஸ்ரியா, பிரானஸ், ரஷ்யா, உக்ரைன், அல்பானியா என ஒவ்வொரு மொழியையும் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்கள் எழுந்து சென்று எழுதுகின்றனர். கதையின் நாயகனான கலையம்சன் எழுந்து சென்று தமிழில் சுதந்திரம் என எழுதுகின்றான். எழுதி நிறைவாகும் நேரத்தில் வெளியே பட்டாஸ் ஒன்று வெடிக்கும் சத்தம் கேட்கிறது.

முள்ளிவாய்க்கால் இறுதிப் போர் வரையில் இடம்பெயர்ந்து சென்று திரும்பிய அந்த மாணவனுக்குப் போரின் துன்பங்கள் ஞாபகத்திற்கு வர கைகளால் தலையைப் பிடித்தபடி கீழே தரையில் இருக்கின்றான். அவனது சக மாணவர்களும் வகுப்பாசிரியர்களும் அவனுக்கு ஆதரவு கொடுக்கின்றனர். ஏன் என்ன நடந்ததெனக் கேட்கின்றனர்.

அவன் தான், தனது தாய் நாட்டில் இறுதிப் போரின் போது பட்ட அவதிகளைக் கூறுகின்றான். அவனது சூழ்நிலையைச் சக மாணவர்கள் புரிந்து கொள்கின்றனர். இலங்கை நாடு தொடர்பாகவும் போரில்பட்ட வடுக்கள் தொடர்பாகவும் பிறதேசத்து மாணவர்களுக்கு உணர்வு பூர்வமாக விபரிக்கும் ஒரு காட்சிப் படிமத்தை இந்தப் படம் சொல்கிறது. நோ வோர் குறும் திரைப்படத்தின் கதையையும் கதையின் நாயகனாகவும் இயக்குநராகவும் கலையம்சன் இயங்கி உள்ளார். இது இப் படத்தின் வெற்றிக்குப் பிரதான காரணம் எனலாம்.

பாத்திர வடிவமைப்பு மிகத் திறம்படச் செய்துள்ளார். முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின் உணர்வுகளைக் காட்சி ஊடாகச் சொல்லாமல் ஒலி வடிவில் சிறப்பாகச் சொல்லி உள்ளார்.

பதினைந்து வயதுச் சிறுவனான கலையம்சன் சின்ன வயதில் ஒரு குறும் திரைப்படமொன்றை உருவாக்கி முதல் திரைப்படத்திலேயே சிறப்புப் பரிசு பெற்றுள்ளமை அவருக்குச் சினிமாத்துறையில் பெரியதொரு எதிர்காலம் உள்ளதென்பதற்குக் கட்டியம் கூறியுள்ளது. தாயகத்தில் வித்தாக முளைத்துப் புலம்பெயர் தேசங்களில் கொடி விட்டுப் படரும் கலையம்சன் போன்றோர் இலங்கைத் திருநாட்டின் புகழை உலகெங்கும் கூறுவோர்களாக இருக்கப் போகின்றனர்.

வேதநாயகம் தபேந்திரன்



# இரத்தத்தில்நனையும்காஷ்மீர்



ஜம்மு காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கும் பிரிவு 370 நீக்கப்பட்டு, மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. 'காஷ்மீரில் பயங்கரவாதம் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது... அமைதிப்பூங்காவாகத் திகழ்கிறது' என்று பிரதமர் மோடி தொடங்கி பா.ஜ.க-வினர் அனைவரும் சொல்லிவருகிறார்கள். ஆனால், 'ஜம்மு காஷ்மீரில் நிலவும் அமைதி, மயான அமைதி. காஷ்மீர் மக்களின் குரல்வளைகள் துப்பாக்கி முனையால் நசுக்கப்பட்டிருக்கிறது' என்பதே காஷ்மீர் தலைவர்களின் கருத்தாக இருக்கிறது!

'காஷ்மீரில் அமைதி திரும்பிவிட்டது' என்று மூன்று மாதங்களுக்கு முன்பு, எந்த ஊரில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசினாரோ, அதே ரஜோரியில் இன்று துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது. அங்கு, சமீபத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட ஏழு பேரை வீடு புகுந்து சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் பயங்கரவாதிகள். இரத்தத்தில் நனையும் காஷ்மீருக்கு, 1,800 சி.ஆர்.பி.எஃப் வீரர்கள் கூடுதலாக அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்கு இப்போது இலக்காகியிருப்பது சிறுபான்மை இந்துக்களும் வெளிமாநிலத்தவரும்தான். இதிலிருந்தே இந்தப் பிரச்னையின் பின்னணியைப் புரிந்து கொள்ளலாம். 2019, ஓகஸ்ட் 5 ஆம் திகதிக்கு முன்புவரை, வெளிமாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஜம்மு காஷ்மீரில் நிலம் வாங்க உரிமை கிடையாது. வெளிமாநிலத்தவர் ஜம்மு காஷ்மீரில் வசிக்க வேண்டுமென்றால், அதற்கான சான்றிதழைப் பெற வேண்டியது கட்டாயம். இந்தக் கட்டுப்பாடுகளை 2019, ஓகஸ்ட் 5 ஆம் திகதி மத்திய அரசு தளர்த்திவிட்டது.

இந்தச் சூழலில், "வெளிமாநிலத்தவரை காஷ்மீருக்குள் அனுமதித்து, மக்கள்தொகை விகிதாசாரத்தை மாற்றியமைக்க மத்திய அரசு முயல்கிறது என்று பயங்கரவாத அமைப்புகள் கருதுகின்றன. இந்தப் பின்னணியில்தான், இந்துக்களையும் வெளிமாநிலத்தவரையும் குறிவைத்துத் தாக்குதல்கள் நடக்கின்றன" என்று அரசியல் நோக்கர்கள் கூறுகிறார்கள்.

இதற்கிடையே, ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் சட்டமன்றத் தேர்தலை நடத்துவதற்கான முஸ்தீபுகளில் இறங்கியிருக்கிறது மத்திய அரசு. 'வாக்காளர் பட்டியலில் சேர 25 இலட்சம் புதிய வாக்காளர்கள் தகுதி பெற்றிருப்பதாக' மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி சொல்ல, 'அந்த 25 இலட்சம் புதிய வாக்காளர்கள் பா.ஜ.க -வின் ஆதரவாளர்கள்' என்று குற்றம்சாட்டியிருக்கிறார் முன்னாள் முதல்வர் மெஹ்பூபா முஃப்தி. இது தொடர்பாக விளக்கம் அளித்திருக்கும் தேர்தல் ஆணையம், 'அந்த 25 இலட்சம் பேர், 18 வயதை நிறைவுசெய்த புதிய வாக்காளர்கள்' என்று தெரிவித்திருக்கிறது.

பயங்கரவாதச் சம்பவங்கள் மீண்டும் தலைதூக்கியிருப்பதால், பல ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட கிராமப் பாதுகாப்புக் குழுக்களை மீண்டும் இயக்குவதற்கான நடவடிக்கையை ஜம்மு காஷ்மீர் நிர்வாகம் முடுக்கி விட்டிருக்கிறது. கிராமப் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களுக்கு ஆயுதங்கள் கொடுத்து, பயிற்சியளிக்கும் நடவடிக்கைகள் தொடங்கியிருக்கின்றன.

**காஷ்மீரில் அமைதி திரும்பட்டும்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளை நிலம்

நிலத்தில் பயிர்செய்யனும் தன்னிறைவை காணனும்
வானம் பொழிகிறதே பூமி விளைகிறதே
விளைச்சலை பெருக்கிட விரைந்து செயற்படனுமே
வீண்வம்பு பேரிட முடிவுதான் என்னாகுமோ

கடுமையாக உழைக்க வேண்டிய காலமிது
கண்மூடித் திரிவது சாலச்சிறந்த விடயமா.
அரசை நம்பினால் அந்தோ கெதியல்லவா
தரிசுநிலங்களை விளைநிலமாக மாற்றனும்

வெளிநாட்டை நம்பி வீண்பொழுதை கழிப்பதா
நம்பிக்கையே நமக்கு உதவிட வேண்டுமல்லவா
நவீன முறையில் விவசாயம் மேற்கொண்டிடவே
இளையோர்க்கு பயிற்சிகள் வழங்கனுமே



எஸ்.பி.கனா,
தெல்லிப்பழை.

# "பொங்கலே நீ பொங்கி வா"

ஏர் பூட்டி உழுது பயிர் நாட்டி
கண்கண்ட தெய்வம் கதிரவனின் துணையாலே
உலகம் முழுவதற்கும் உணவளித்திடும்
உழைக்கும் வர்க்கத்தைப் போற்றி மகிழ்வோம்
கதிரவனுக்கு நன்றிக் கடன் செய்யும் பொங்கல்
உழவர் திருநாள் மட்டுமல்ல
உறவினர் மகிழ்ந்திடும் திருநாள்
புதிய பானைதனில் அறுவடை நெல் அரிசியிட்டு
பால் சர்க்கரை பயறிட்டு
பொங்கி மகிழ்ந்திடும் நன்நாள்
உறவினர்களுடன் பொங்கல் கொடுத்து
பகிர்ந்து உண்ணும் நன்நாள்
தமிழ்த் தலைமைகள் இனியாவது ஒன்றுபட
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின்
கண்ணீருக்கு ஒரு முடிவு காலம் வந்திட
கைதிகள் விடுதலை, காணி அபகரிப்புக்கு நல்முடிவு கிடைத்திட
தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்ந்திட
பொங்கலே நீ பொங்கி வா

நயினை விசு இராசநாயகம்.





# உன்னத பெருநாள் உழவர் திருநாள்

வந்தனை செய்தான் உழவுத் தொழிலை
புரட்சிக் கவிஞன் அன்றே - இன்னும்
நிந்தனை செய்தான் வீணில் உண்டு
களிப்போரை என்றே
எந்தனை உன்னை உணவிட்டு வாழ்விப்பது
உழவுத் தொழில் ஒன்றே - உழவரை
சிந்தனையில் எண்ணி சிரம்தாழ்த்தி கரம்கூப்பி
வணங்கிடுவோம் இன்றே

அங்கம் வருத்தி அரும்வயல் திருத்தி
ஆதவன் கருணையிலே - அவன்
செங்கதிரும் மழையும் சிந்திய வியர்வையும்
செந்நெல்லாய் விளைந்திடவே
பங்கயனால் பெற்ற பயன்கள் யாவிற்கும்
நன்றியினைப் பகர்ந்திடவே - பொங்கல்
பொங்கியே படைப்பர் பெருநாளாம் உன்னத
உழவர் திருநாளிலே

மண்ணையும் மழையையும் நம்பிடும் உழவர்
வருடத்தில் ஒருநாளே - அந்த
மழையினைத் தந்திடும் கதிரவன் அருளுக்கு
காணிக்கை தரும் நாளே
விளைவிற்கு துணைநின்ற ஆதவனுக்கு நன்றியை
நல்கிடும் பெருநாளே - என்றும்
உலகத் தமிழினம் போற்றும் பொங்கல்
எனுமுழவர் திருநாளே

டே.த.எட்வின்,
உடுவில்.

# மௌனத்தின் தேடல்- 592



# அறிக யாரென

உறவுகள் இழந்து
உடைமைகள் தொலைத்து
அறமதை மறந்தே
ஆட்சியில் இதயம்
வறண்டவர் உணவும்
வலிக்கு மருந்தும் வேண்டி
அறிவே வழங்காரை
அறிக யாரென...

சாமிபுத்திரன்,
சரவணை.

# மௌனத்தின் தேடல்- 593



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# மானிடரா?

யுத்தத்தில் கொத்தாக
நித்தமும் தமிழரைப்
புத்தரின் போதனையை
பொசுக்கியதால் இனும்
செத்தாரை முட்கம்பிக்குள்
சிறுமைப்படுத்தியே மனித
உயிர் மதியார் மானிடரா?

தவகநந்தன்,
தாவடி.

# காணாமல் போனோம்

வேட்டியைக் கிழித்து
வெள்ளைக் கொடி பிடித்து
சரணடைந்த நாங்கள்;
பாதிவேட்டியுடன் அன்றே
காணாமல் போனோம்

பி.மதுஷ்சன்,
தையிட்டி.

# கம்பி வேலிக்குள்...

போர் நிறுத்தம் - சூனியப் பிரதேசம்

உண்மையென நம்பி வந்தோம்

கொத்துக் குண்டுவீசி பாதி வழியில்

பலரைக் கொன்று குவித்தீர்

தப்பிப் பிழைத்த எம்மை

கம்பி வேலிக்குள் அடைத்து விட்டு

உலகில் பெரிய அகதி முகாம்

இதுதானென்று மார்தட்டிக் கொண்டீர்

பிரமன்,
கொக்குவில்.

# கொடுமைகள்

வாழும் உரிமைக்காய்
கண்ணீரும் செந்நீரும் சிந்தி
உடலுடன் உயிரையும் ஈகமாக்கி
யாத்திரை செய்தோம் கனவோடு.
கிடைத்ததோ முட்கம்பி வேலி
சிறையடைப்புக் கோரம்
முட்டி மோதும் வேதனைகளுடன்
சொல்லொணாத்துயர் சுமந்து
உருக்குலைத்த எம்மை எம்மவர்
பார்க்கும் பார்வை...?

சி.இ. அன்புத்துரை,
சம்மட்டியோலை,
மானிப்பாய்.

# எதிரியின் பிடியில்

முள்வேலிக்குள்
தள்ளா வயதில்
எதிரியின் பிடியில்
ஏக்கப் பார்வை
மதி கெட்டிட
மானம் இழந்து
அறம் போற்றும்
மறத் தமிழன்
பசி வந்திடப்
பத்தும் பறந்துவிடும்

ந.ஆதிரை,
ஆவரங்கால்.

# எதிர்காலம்

தோட்டம் துரவு
வீடுவாசல்
வளம் பல இருந்தும்
முட்கம்பிகள் பின்னால்
இளையவரும் முதியவரும்
எதிர்காலம் பற்றிய ஏக்கத்தோடு

பிரகவி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா

## எதிர்பாராத விபரீதம்

(காலத்தின் பதிவு) 50

பலவர்மன் நின்ற இடத்தை விட்டு நகரவில்லை. "நீ கொல்ல முயலும் இந்த வாலிபன் யார் தெரியுமா?" என்று வினவினான் அவன்.

"தெரியாது? தெரியவேண்டிய அவசியமில்லை" என்றான் வில்வலன்.

"அவசியமிருக்கிறது." பலவர்மனின் சொற்களில் எச்சரிக்கை ஒலித்தது. "என்ன அவசியம்?"

"கோட்டை நலனைப் பற்றிய அவசியம்."

"இவன் அழிந்தால் கோட்டை அழிந்துவிடுமா?" "ஆம்."

"ஏன்?"

"இவன் அகூதாவின் உபதலைவன்."

உறுதியுடனும் தெளிவுடனும் எல்லோருக்கும் கேட்கும்படியாகவும் உதிர்க்கப்பட்ட அந்த மூன்று சொற்கள், அங்குக் கூடியிருந்த அனைவருடைய உள்ளத்திலும் விவரிக்க இயலாத திகிலை விளைவித்தது. அதுவரை எதற்கும் அசையாத வில்வலன் கூடச் சற்று அசைந்தான். அவனுடன் வந்த மற்ற மூன்று தலைவர்களும் சங்கடத்தாலும் அச்சத்தாலும் லேசாக நடுங்கினார்கள். அந்த அச்சத்தையெல்லாம் நொடிப்பொழுதில் எடை போட்ட பலவர்மன் அவர்கள் மேற்கொண்டு யோசிப்பதற்கு இடங்கொடாமல், "அதுமட்டுமல்ல, இன்னும் சில நாட்களில் அகூதா இங்கு வருகிறார்.

அந்தச் சமயத்தில் அவருடைய உபதலைவர், இந்த இளையபல்லவர், இங்கு இல்லா விட்டால் இந்த ஊரையும் இவருக்குக் கேடு விளைவித்த அனைவரையும் ஒழித்துக் கட்டிவிடுவதாகச் சபதம் செய்திருக்கிறார். நிலைமை உனக்குப் புரிகிறதென்று நினைக்கிறேன் வில்வலா!" என்றும் கூறினான்.


பேரமைதி அந்தக் கடற்கரையைச் சில விநாடிகளுக்குச் சூழ்ந்தது. அதை மீண்டும் இளையபல்லவனே உடைத்தான். "அதற்காகக் கோட்டைத் தலைவர் அஞ்சவேண்டுவதில்லை, நான் இறந்தால் அகூதாவினால் எந்தக் கஷ்டமும் நேரிடாதிருக்க நான் ஏற்பாடு செய்கிறேன்" என்று அந்த அமைதியைக் கிழித்தது இளையபல்லவனின் குரல்.

பலவர்மன் திரும்பி இளையபல்லவனை நோக்கினான். சிந்தையிலிருந்த குழப்பம் அவன் முகத்தில் தெரிந்தது. 'வில்வலனிடம் பிராணனை விடுவதில் இத்தனை ஆசை எதற்கு இவனுக்கு?' என்று தனக்குள் கேட்டுக் கொள்ளவும் செய்தான் பலவர்மன்.

இளையபல்லவன் தொடர்ந்து சொன்னான். "வில்வலன் ஆசையைத் தீர்க்க நான்தான் ஒப்புக்கொண்டேன். ஆகவே இந்த வாள்போரில் நான் இறந்தால் இந்தக் கோட்டைக்கு எவ்வித ஆபத்தும் நேரிடாமல் காப்பது என் கடமை. இதோ இருக்கும் எனது உபதலைவன் அமீர் இந்தச் சண்டை எனது வேண்டுகோளால் நடந்தது என்பதை அகூதாவுக்குச் சொல்லுவான். இதன் விளைவாக யாருக்கும் தீங்கு ஏற்படக்கூடாதென்பது என் கோரிக்கையென்பதும் தெரிவிப்பான். அகூதா இதுவரை என் கோரிக்கையைத் தட்டியதில்லை. இதோ உங்களைக் காக்க அகூதாவின் இதய நண்பன் அமீர் இருக்கிறான்," என்று.

அத்துடன் அமீரையும் அழைத்து அந்தக் கோட்டையைக் காப்பதாகத் தன்மீது ஆணையும் இடச் சொன்னான். இளையபல்லவன் போக்கு எதுவும் அமீருக்கோ, அவன் சகாக்களுக்கோ, பலவர்மனுக்கோ புரியவில்லை. எதற்காக அந்த ஆபத்தில் இளையபல்லவன் சிக்கிக் கொள்ளப் பிரயத்தனப் படுகிறான் என்பதை உணராத மஞ்சளழகி கூட அச்சம் மிகுந்த கண்களை மண்டபமேடையிலிருந்து அவன்மீது வீசினாள்.

(தொடரும்...)



# உலகின் இயற்கை அதிசயங்கள் ஏழு - பகுதி 2

அந்த இடம்தான் இன்று "கேப்டவுன்" என்று வழங்கப்படுகிறது. அப்போது, அந்த இடம் வெறும் சதுப்பு நிலமாக இருந்தது. வெள்ளையர்களுக்குப் பணம் கொடுத்துக் குடியேற்ற வேண்டியிருந்தது.

ஆகவே கிழக் கிந்தியக் கம்பெனி 50 பேரை மட்டுமே அனுமதித் தது. அம் மலைப் பகுதிகளை ஆராய பல குழுக்களை அனுப்பி தொழிற்சாலை களை ஏற்படுத்தி மக்கள் வாழும் நகரமாக்கினார் ரீபீக்.

மலையேற்ற வீரர்களுக்கு உவப்பான மலை டேபிள் மலை. 1503 ஆம் ஆண்டு ஆண்டானியோ டி சால்டானோ என்னும் போர்ச்சுக்கீசியர்தான் முதன் முதலில் மலையேறியவர். இன்றைக்கு 350 இற்கும் மேற்பட்ட மலையேற்றப் பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்தாலும் சால்டானோ கண்டறிந்த வழிதான் மிகச் சுலபமான பாதை என்கிறார்கள். 1790 இல் ஆன்னி பெர்னாட் என்ற பெண்தான் இந்த மலையில் ஏறிய முதல் பெண்மணி

இங்குள்ள அபூர்வமான தாவர வகைகளில் எழுபது சதவிகிதம் உலகில் வேறு எந்த பகுதியிலும் கிடைப்பதில்லை. இவற்றைக் கொண்டு இங்கு டேபிள் மவுண்டன் தேசிய பூங்காவை அமைத்திருக்கிறார்கள். இங்கு காணப்படும் டேஸ்வி என்கிற அபூர்வ விலங்கு பார்ப்பதற்கு ராட்சச எலி போலத் தோற்றமளிக்கும்.

இது யானை யினத்தின் ஒரு வகையைச் சேர்ந்ததாம். டேபிள் மலைப் பகுதி களில் கனத்த மழை பெரும் பாலும் பெய்வது உண்டு. மலை உச்சியில் வேகமாக மேகங்கள் உருவாகி மூடிக் கொள்ளும். மேகமூட்டத்தினால் மலையை மூடும் இந்த அதிசயத்தை, "டேபிள் கிளாத்" என்றும் 'க்ளவுட் 9' என்றும் கூறுவர்.

பிலிப்பைன்ஸ் பாதாள ஆறு பிலிப்பைன்ஸ் நாட்டின் ப்யூர்ட்டோ ப்ரின்செஸ்ஸா தீவின் தலைநகர் பாளவானில் இருந்து 80 கி.மீ தொலைவில் உள்ள குகைகள் நிரம்பிய பகுதியில் கேபாயுகன் ஆறு காற்றின் வேகத்தில் பிரிந்து. குகைகளின் வழியே சுமார் 24 கி.மீ பயணித்து மேற்கு பிலிப் பைன்ஸ் சமுத்திரத்தில் கலக்கிறது.

பாதாள ஆறு என்றால் பூமிக்கு அடியில் என நினைக்க வேண்டாம். கடல் மட்டத்துக்கு மேலேதானக் அமைந்திருக்கிறது. குகைகளின் வழியே பயணிக்கும் தூரம் உண்மையில் 8 கி.மீ தான். இருப்பினும் குகைகளினூடே படகுகள் மூலம் பயணிக்கையில் அப்படியானதொரு அனுபவத்தை அது தருகின்றது.

குகை வழியே செல்லும் ஆற்றினை பொதுவாக சுற்றுலா வாசிகள் ப்யூர்ட்டோ ப்ரின்செஸ்ஸா ஆறு என்று தீவின் பெயரை வைத்தே குறிப்பிட்டாலும் செயிண்ட் பால் ஆறு என்பது தான் அதன் உண்மையான பெயர்.

இங்குள்ள கற்பாறைகள் பல உருவங்களில் இயல்பாக அமைந்திருக்கின்றன. உதாரணமாக குரங்கு வடிவத்திலும், யானை, படுத்திருக்கும் பெண், விலங்குகள் வடிவத்திலும் இயற்கையாகவே அமைந்துள்ள அழகை இங்கு இரசிக்கலாம். யுனெஸ்கோ நிறுவனம் இந்த இடத்தை உலக பாரம்பரிய இடங்களில் ஒன்றாக 1999 ஆம் ஆண்டு அறிவித்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
# சுகமான விடியல்
325
வலம்புரியின் மருத்துவச்சுடர்

## வாழ்வுக்காய் கையேந்தி நிற்கின்றேன் இப்படிக்கு இருதயம்


நான் துடித்துக் கொண்டு இருக்கும் இதயம். இருதயம். உங்களிடம் மனம் விட்டு பேச ஆசைப்படுகிறேன். அதற்கு மேலாக உங்களிடம் உதவி கோரி வந்திருக்கிறேன்.

நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பது போல மனம் நான் அல்ல. அன்பின் அடையாளமும் நான் அல்ல.எனக்கு நினைக்கத் தெரியாது. அன்பையும் ஆதரவையும் ஞாபகங்களையும் தேக்கி வைக்கவும் தெரியாது.

அது தலையில் உள்ள மூளையின் தொழில். நான் செய்யாத தொழிலுக்காக போலிக்கு என்னை அர்ச்சிக்க வேண்டாம். நான் உண்மை யிலே செய்யும் சேவைக்கு கைமாறு கேட்டு கையேந்தி நிற்க்கின்றேன்.

நீங்கள் எதற்கு கைமாறு எனக் கேட்கலாம். நீங்கள் ஓய்வெடுத்து உறங்கும் போது கூட நான் இந்த உயிர் துடிப்பை நிறுத்தி உறங்க முடியாது.

நான் தற்காலிகமாக உறங்கினால் கூட உங்கள் உறக்கம் நிரந்தரமாகி விடும். நான் உதிரம் பாய்ச்சி வளர்த்த இந்த உடம்பை இழக்க முடியாது.



உங்கள் அன்னையின் கருவறையிலே தொடங்கிய எனது துடிப்பு கல்லறையில் முடியாமல் தடுக்க உங்களிடம் கையேந்தி நிற்க்கின்றேன்.

புன்னகை செய் எனக்கு புத்தூக்கம் உண்டாகும். வெறுப்பை மறந்து அன்புசெய் எனது துடிப்பு இலகுவாகும். பிறரை மன்னித்துப்பார் எனது துடிப்பு நிதானமாகும்.

நீ குதூகலிப்பதற்காக பார்ட்டி என்று சொல்லி குடித்து, புகைத்து, கரியல் பொரியல் கடித்து, சோடா குடித்து கூச்சலிடுகையில் நான் படும் பதைபதைப்பை யார் அறிவார்.

இவற்றை நிறுத்த மனம் துணியாயோ? தினமும் நடந்து பார். சீர் பெறும் உனது குருதி ஓட்டம். உன்னை நிறுத்துப்பார் உனது பாரம் உனக்குப் புலப்படும்.

அதைக் குறைத்துப்பார் என் வேலைப்பளு குறையும். ஆரோக்கியமாய் உண்டுபார் பால்,பழங்கள்,பருப்பு வகை, கச்சான்,மீன்,மரக்கறிகள், அவரைகள் எனஆரோக்கியமாய் உண்டுபார் என் இரத்தக் குழாய்கள் அடைப்பெடுக்காது.

வீசும் காற்றை விடிகாலை பொழுதை அதைகத்தும் குருவிகளை, காயாத புற்றரையை, பொழியும் மழைத் துளியை, புன்னகைக்கும் மழலைகளை இரசித்துப்பார்.

அத்துடன் நான் கேட்டவற்றை எல்லாம் தந்துபார் உனக்காக ஆயுள் முழுக்க நிற்காமல் துடித்திருப்பேன்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

## படிக்கும் ஆற்றலை இசைப்பயிற்சி மேம்படுத்தும்



இசையானது ஆரோக்கியமான மனித வாழ்விற்கு பல வழிகளிலும் உதவுகின்றது என்பதை பல ஆராய்ச்சிகள் உறுதி செய்துள்ளன. மன அழுத்தத்தையும் மனப்பதட்டத்தையும் குறைப்பதற்கு இசை உறுதுணையாக இருப்பதுடன் பல நோய்களின் தீவிரத்தன்மையைக் குறைப்பதற்கும் இசை பயன்படுகின்றது என பல ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். அண்மையில் அமெரிக்காவில் செய்யப்பட்ட ஆய்வுகளின் முடிவின்படி இசைப் பயிற்சி இளையவர்களிடம் கல்வி கற்கும் திறனை மேம்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சிறுவயது குழந்தைகளின் மொழித் திறன் மற்றும் படிக்கும் ஆற்றலை இசைப்பயிற்சிமேம்படுத்துவதாக இந்த ஆய்வின் முடிவுகள் கூறுகின்றன.

## மன அழுத்தத்தால் புற்றுநோய் ஆபத்து

இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் புற்றுநோய் பாதிப்பில்லாத ஒரு லட்சத்து 60 ஆயிரம் பேர்களில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், குறைந்த அளவு மன உளைச்சல் அடைந்தவர்களை விட, மன உளைச்சலால் அதிக பாதிப்படைந்தவர்களுக்கு பல வகையான புற்றுநோய்களால் ஏற்படும் உயிர் ஆபத்து மூன்று பங்கு அதிகமுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. குடல், விந்துப்பை, கணையம் மற்றும் உணவுக்குழாய் ஆகியவற்றில் உண்டாகும் புற்றுநோய் ஆபத்து இவர்களுக்கு அதிகமுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இது குறித்த ஒரு திட்டவட்டமான காரண இணைப்பை உருவாக்க மேலும் அதிக ஆய்வுப் பணி தேவைப்படுகிறது என பிஎம்ஜே என்றழைக்கப்படும் பிரிட்டிஷ் மருத்துவ இதழில் ஆராய்ச்சியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் சர்வதேச பிரசாரத்தை ஆரம்பித்தது அமெரிக்கா



**(வொஷிங்டன்)**

**சர்வதேச அளவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மற்றும் நியாயமற்ற முறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யவேண்டும் என வேண்டுகோள்விடுக்கும் பிரசார இயக்கத்தை அமெரிக்கா ஆரம்பித்துள்ளது.**

மனித உரிமைகளிற்காக சர்வதேச பிரகடனம் தெரிவிப்பது போல சர்வதேச அளவில் ஒவ்வொரு பிரஜையும் கருத்து சுதந்திரம், வெளிப்பாட்டு சுதந்திரம்,அமைதியான விதத்தில் ஒன்று கூடும் சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமைகளிற்கு உரித்தானவர்கள் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனைத்து பகுதிகளிலும் உள்ள சாதாரண மக்களும் இந்த பிரசார முயற்சிக்கு ஆதரவளிக்கவேண்டும் எனவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என அமெரிக்கா வேண்டுகோள்விடுக்கின்றது மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களின் உலகளாவிய தன்மையில் நம்பிக்கை கொண்ட அனைவரையும் இந்த முயற்சிக்கு ஆதரவளிக்க அமெரிக்கா அழைப்புவிடுக்கின்றது என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

உங்கள் செயல்களிலும் உங்கள் குரல்களிலும் சக்தி இருக்கின்றது இந்த கைதிகளை விடுவிக்கவும் மனித உரிமை மீறல்களை குறைக்கவும் நீங்கள் உதவலாம் எனவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (4)

# கொரோனாவை தடுக்கும் "ஸ்பிரே" கண்டுபிடிப்பு

(வொஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் உள்ள என்ஜினீயர்கள், மெல்லிய நூல் போன்ற மூலக்கூறு இழைகளை கண்டுபிடித்துள்ளனர். பொதுவாக, கொரோனாவை உண்டாக்கும் வைரஸ் நாம் சுவாசிக்கும்போது நுரையீரல் வழியாக உடலுக்குள் நுழைந்து தொற்றை உண்டாக்குகிறது.

இந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்த மூலக் கூறுகள், சுவாசப்பாதையிலேயே வைரஸை தடுத்து விடும். அதன்மூலம் அது நுரையீரலை அடைவது தடுக்கப் பட்டு கொரோனா ஏற்படாமல் தடுக்கலாம்.

இவர்கள் கண்டுபிடித்த மூலக்கூறுகள் பஞ்சு போல் செயற்பட்டு கொரோனா வைரஸையும் இதர வைரஸ்களையும் உறிஞ்சி விடும். அதனால் அந்த வைரஸ்கள் மேற்கொண்டு உடலுக்குள் பயணிப்பது தடுக்கப்படும். இந்த மூலக்கூறுகளை மூக்கு வழியாக "ஸ்பிரே" போல் பயன்படுத்தலாம்.

வாய் வழியாகவும் பயன்படுத்தலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். இதை சுண்டெலியிடம் பயன்படுத்தியபோது வெற்றிகரமாக செயற்பட்டுள்ளது.

மூலக்கூறு இழைகள், சுண்டெலியின் நுரையீரலில் 24 மணி நேரம்வரை இருந்தபோதிலும் நுரையீரலில் எரிச்சலோ, பாதிப்போ ஏற்படவில்லை. (4)

# பிரித்தானியா முழுவதும் வெள்ள அபாய எச்சரிக்கை

(லண்டன்)

எதிர்வரும் நாட்களில் அதிக கனமழை, வெள்ளம் மற்றும் குளிர் காலநிலைக்கு தயாராகுமாறு பிரித்தானியா முழுவதும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் நிறுவனம் 80 வெள்ள எச்சரிக்கைகளை விடுத்துள்ளது.

முக்கியமாக மேற்கு மற்றும் தென்மேற்கு இங்கிலாந்தில் 155 வெள்ள எச்சரிக்கைகளை வெளியிட்டுள்ளது.

இன்று மாலை முதல் இங்கிலாந்தில் வெப்பநிலை குறைவதால் கடுமையான குளிர் காலநிலை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (4)




# சூப்பர் கார் தயாரிப்பில் ஈடுபடும் தலிபான்கள்



(காபூல்)

ஆப்கானிஸ்தானை ஆளும் தலிபான் அரசின் உத்தரவின்பேரில் பொறியியல் குழுவினர், உள்நாட்டிலேயே தயாரித்துள்ள சூப்பர் காரை அறிமுகப்படுத்தியுள்ளனர்.மடா 9 என பெயரிடப்பட்டிருக்கும் இந்த சூப்பர் கார் உருவாக்கத்தில் 30 பொறியியலாளர்கள் ஈடுபட்டனர்.

தலிபான் அரசின் உயர்கல்வித்துறை அமைச்சர் ஆப்துல் இந்த சூப்பர் காரை அறிமுகம் செய்து வைத்தார். (4)

# ஜனாதிபதி பதவியில் இருந்து புடின் ஓய்வு பெற திட்டம்?



(மொஸ்கோ)

உக்ரைன் ஊடுருவலைத் தொடர்ந்து கடுமையான அழுத்தத்தை சந்தித்து வரும் ரஷ்ய ஜனாதிபதி புடின் அமைதியான முறையில் ஓய்வு பெறுவது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்த முயற்சிப்பார் என அவரது முன்னாள் உதவியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஓய்வுக்குப் பின் கருங்கடலில் அமைந்துள்ள தனது இரகசிய மாளிகையில் தனது கடைசி காலத்தை செலவிட புடின் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானையில் பொங்கல் வியாபாரம் வீழ்ச்சி

## வியாபாரிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலும் தைப் பொங்கல் வியாபாரங்கள் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் சற்று குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக யாழ்.சங்கானை பகுதிகளில் வழமையாக களை கட்டும் பொங்கல் வியாபாரங்கள் இம்முறை கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

பொங்கல் பானை மற்றும் ஏனைய பொருட்களின் விலைகள் கடந்த ஆண்டை ஒப்பிடு கையில் இவ்வாண்டு பல மடங்கு அதிகரித்துள்ளதாகவும் இதனால் பொங்கல் பண்டிகையைக்கூட கொண்டாட முடியாத ஒரு நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

அதேவேளை இம்முறை யாழின் பல்வேறு இடங்களில் மண்ணால் ஆன பொங்கல் பானைகளை அதிகளவில் மக்கள் கொள்வனவு செய்வதாகவும் வியாபாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# கிளிநொச்சியில் சீனாவின் டீசல் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேச விவசாயிகளுக்கு சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இலவசமாக அறுவடைக்குரிய டீசல் நேற்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது

சீன அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் 2022/2023 பெரும்போக அறுவடைக்கான எரிபொருள் விநியோகத்திற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு ஹெக்டேயருக்கு 15 லீற்றர் வீதம் 1/2 ஏக்கர்-2 1/2 ஏக்கருக்கு இடைப்பட்ட விவசாயிகள் இலவச எரிபொருள் விநியோகத்துக்காக தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான எரிபொருள் வழங்கும் வைபவம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பூநகரி கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் ஒரு ஹெக்டேயருக்கு குறைவான அளவில் விவசாயம் மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு அறுவடைக்குரிய டீசல் வழங்கும் வைபவம் நேற்று பகல் 11 மணிக்கு பூநகரி கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன்பந்துல சேன, மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா.தேவரதன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு விவசாயிகளுக்கான எரிபொருளை டீசலை வழங்கி வைத்தனர்.

குறித்த நிகழ்வில் பூநகரி பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் தலைவர், முகாமையாளர், கமல சேவை நிலையத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டு குறித்த எரிபொருள் வழங்கலை மேற்கொண்டிருந்தனர். (4-315-316)

# தைப்பொங்கல் கலை விழா

(யாழ்ப்பாணம்)

காலையடி, பண்டத்தரிப்பில் இயங்கிவரும் மறுமலர்ச்சி மன்றத்தின் தைப்பொங்கல் கலை விழா இன்று மாலை 4 மணியளவில் மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது.

இக் கலை விழாவின் விசேட நிகழ்வுகளாக இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் நடன ஆசிரியை செல்வி என்.அபிதாவின் நெறியாள்கையில் உருவான வரவேற்பு நடனம், கவின் கலை பயிலக மாணவர்கள் வழங்கும் குழுப்பாடல் மற்றும் செ.றொபின்சனின் நெறியாள்கையில் உருவான "புதிய பயணம்" நாடகமும் இடம்பெறவுள்ளதுடன், சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் பு.கணேசராசாவின் நெறியாள்கையில் மருத்துவப் பேராசிரியரும் எழுத்தாளருமான நந்தியின் சிறுகதையைத் தழுவி உருவான "காதலுக்கு மருந்து" நகைச்சுவை நாடகமும், பாடசாலை மாணவர்களின் வில்லிசை உள்ளிட்ட பல கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. அனைவரையும் தவறாது இக் கலை விழாவைக் கண்டுகளிக்குமாறு மறுமலர்ச்சி மன்றத்தினர் அழைப்பு விடுக்கின்றனர். (4)

# மணல் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மணல் பகிரங்க ஏல விற்பனை செய்யப்பட்வுள்ளது என சாவகச்சேரி நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# வடமராட்சியில் கால்நடை திருட்டில் ஈடுபட்ட இருவர் கைது 4 மாடுகள் மீட்பு



(கரணவாய்)

வடமராட்சியில் அனுமதிப் பத்திரம் இன்றி மாடுகளை ஏற்றிச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 4 மாடுகள் மீட்கப்பட்டதுடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீர தலைமையிலான பொலிஸாரின் சுற்றிவளைப்பின் போதே இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவர் கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.(4-60)

# ஆசிரிய கலாசாலையில் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பொங்கல் விழா இன்று காலை 8.30 மணிக்கு கலாசாலை முற்றத்தில் கலாசாலை நுண்கலை மன்ற ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க பெருந்தலைவருமாகிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

பொங்கல் செயற்பாடும் அதற்கான விளக்கங்களும் என்ற பொருளில் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் செயன்முறை ரீதியாக ஆசிரிய மாணவர்களுக்கு விளக்கவுரை வழங்குவார். (4-33)

# இராசிபலன்

15.01.2023
தை 01, ஞாயிற்றுக்கிழமை
அட்டமி பிற்பகல் 3.04 மணிவரை
சித்திரை பிற்பகல் 3.07 மணிவரை

சுபநேரம் 9.34-11.04 மணிவரை
இராகுகாலம் 5.04-6.34 மணிவரை
சபரிமலை ஜோதி தரிசனம்
தைப்பொங்கல் தினம்

சந்திராஷ்டமம்
உத்திரட்டாதி, ரேவதி


வளவன்





நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவர், உடல் நலன் சீராகும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




திட்டமிடப்படாத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பயணங்களால் பலனுண்டு, சுப விரயங்கள் கூடும் நாள்.





ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டில் அதிக நம்பிக்கை கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.




அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், உறவு-பகை பாராமல் உதவும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




உறவினர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பாகப் பிரிவினைகள் சுமுகமாகும்.




வழிபாட்டால் சிறப்புகளைக் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.




பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பிறர் உதவியுண்டு.




வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் மகிச்சி அதிகரிக்கும், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு.




தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.




காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், திடீர் விரயங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் சிறுசிறு முரண்பாடுகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

நான் நேரத்தை வீணாக்கினேன். இப்போது நேரம் என்னை வீணாக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முட்டை இறக்குமதிக்கு

# கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் அனுமதி கட்டாயம்

## வர்த்தக அமைச்சு

(கொழும்பு)

முட்டைகளை இறக்குமதி செய்யும் போது கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் அனுமதி கட்டாயம் என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. முட்டையை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்திருந்ததன் பின்னர் இதற்கான டென்டர் அழைப்பின் போது அதற்காக முன்வந்த சர்வதேச விநியோகஸ்தர்களில் நூற்றுக்கு 90 சதவீதமானோர் இந்திய விநியோகஸ்தர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

முட்டைகளை இறக்குமதி செய்வதில் எவ்வித பிரச்சினையும் இல்லையென்றாலும் இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்க முடியாது என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஹேமலி கொத்தலாவல தெரிவித்துள்ளார். நாடு ஒன்றில் இருந்து முட்டைகள் இறக்குமதி செய்யப்படுமானால், குறித்த நாடு பறவைக் காய்ச்சல் இல்லாத நாடாக இருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். முட்டைகளை இறக்குமதி செய்யும் போது கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் அனுமதி கட்டாயம் என்பதால், அதற்கான அனுமதியை பெற்றுத் தருமாறு வர்த்தக அமைச்சின் தொழில் நுட்ப குழு எழுத்து மூல அனுமதியை ஏற்கனவே கோரியுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.அத்தபத்து தெரிவித்தார். (4)

# தைப்பொங்கல் விழா ஒரு நன்றியின் விழா

## யாழ்.ஆயர்



(யாழ்ப்பாணம்)

பொங்கல் விழா ஒரு நன்றியின் விழா. நம்மை என்றும் நன்றி கூறிக்கொண்டே இருக்க அழைப்பு விடுக்கும் ஒரு விழா. தமிழ் மக்கள் கொண்டாடும் இந்த நன்றியின் பெருவிழாவை உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் 2023 ஆம் ஆண்டில் கொண்டாடும் வேளை இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம் என யாழ்.ஆயர் கலாநிதி. யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

எம்மோடு வாழும் மனிதர்கள் அனைவரும் இறைவனின் படைப்புக்கள். அவர்கள் எம்மோடு வாழ இறைவனால் அனுப்பப்பட்டவர்கள். அவர்கள் அனைவரோடும் நல்ல உறவைப் பேணுங்கள். அவர்கள் அனைவரையும் அவர்கள் நிலைகளில் வைத்து நன்கு புரிந்து கொள்ளுங்கள். அவர்களின் மனித குணங்களோடு அவர்களை அன்போடு ஏற்றுக் கொள்ளுங்கள். வாழும் குறுகிய காலத்தில் அனைத்து மனிதர்களையும் மகிழ்வியுங்கள். நீங்கள் சந்திக்கும் மனிதர் மனதுகள் மகிழ்ச்சியால் பொங்கட்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சம்பந்தப்பட்ட தமிழ்த் தலைமைகளுக்கும் இடையில் ஆரம்பித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. இப்போது ஆரம்பிக்கப்பட்ட இந்த பேச்சுவார்த்தையில் தமிழ்த்தரப்புக்கள் மிகக் கவனமாகவும் அவதானமாகவும் இருக்கும் வகையிலும் சிங்களத் தலைமைகள் ஓரளவு நேர்மையாக இருக்கும் எனப் பரவலாக எண்ணப்படுகின்ற வகையிலும் நல்லது நடக்கும் என நம்புவோம்.

இந்த பேச்சுக்கள் வழி இலங்கை நாட்டில் நிரந்தர தீர்வையும் ஏற்படுத்த தமிழ் கட்சிகள் அனைத்தும் தமது கட்சி முரண்பாடுகளையும் வேற்றுமைகளையும் மறந்து செயற்பட வேண்டுமெனத் தமிழ் மக்கள் சார்பில் வேண்டுகிறோம் என தெரிவித்தார். (4)


**கட்டைவேலி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவு சங்க கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர் அனைவருக்கும்**

எமது கிராமிய வங்கியில் சேமிப்பு கணக்கினை வைத்திருக்கும் ஒவ்வொரு வாடிக்கையாளரும் தமது சேமிப்பு மீதியினை எதிர்வரும் 30.04.2023 இற்கு முன் ரூபாய் 1000.00 ஆக பேண வேண்டும் என இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

கணக்கு மீதியினை ரூபாய் 1000.00 ஆக அதிகரிக்காவிடின் அக் கணக்குகள் முடிவுறுத்தப்படும் என்பதனையும் தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

தலைவர்
கட்டைவேலி நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்.

(சி-5781)



**சுயதொழில் முயற்சியாளருக்கு கருத்தரங்கு**

திகதி - 21.01.2023 சனிக்கிழமை
இடம் - YMCA யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில்
நேரம் - காலை 9-12 மணிவரை

சுயதொழிலில் ஈடுபடுபவர்களும், ஆரம்பிக்க விரும்புபவர்களும் பங்குபற்றலாம். உங்கள் வணிகத்திட்டம், மாதிரி தயாரிப்புக்களைக் கொண்டு வரவும் தெரிவு செய்யப்பட்டோருக்கு நிதி உதவி வழங்கப்படும்.

முழுநேரம் பங்குபற்றுபவர்களுக்கு பேருந்துக் கட்டணம் வழங்கப்படும்.

Northern Technical Institute
Reg.No- PvT 121 637

தொலைபேசி- 077 650 5580/ 076 852 5606

(4243)



**சென்.ஜோண்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்**

**சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல்**

எமது பாடசாலையில் இயங்கிவரும் சிற்றுண்டிச்சாலையை எதிர்வரும் 01.03.2023 முதல் கேள்வி ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கேள்வி கோருவோர் எதிர்வரும் ஜனவரி 16 ஆம் திகதி முதல் ஜனவரி 31 ஆம் திகதி வரை பாடசாலை அலுவலகத்தில் ரூபாய் ஆயிரத்தினை (மீளளிக்க முடியாது) செலுத்தி விண்ணப்பத்தினைப் பெற்று பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்பாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ பாடசாலை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோருகின்றோம்.

விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது கேள்விப் பணமாக ரூபாய் பத்தாயிரத்தினை (மீளளிக்க முடியும்) அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். இக்கேள்வி ஒப்பந்தம் பாடசாலை அலுவலகத்தில் பெப்ரவரி 20 ஆம் திகதி மதியம் 12.00 மணியளவில் திறக்கப்படும்.

அதிபர்

(சி-5783)



**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: சூரி 12 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA Computer Science இறுதி ஆண்டு (கனடா)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் கனடா மட்டும்<br>தொ.இ: B/13246 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: சூரி செவ் 6 இல்<br>தகைமை/தொழில்: A/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/11708 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: சூரி 12 செவ் 6 இல்<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/13251 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 9 சூரி 3 செவ் 5 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்<br>தொ.இ: G/11713 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>கி.பா: சூரி 4 செவ் 11 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc Software Engineer (சிங்கப்பூர்)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி அல்லது உயர் கல்வி<br>தொ.இ: B/13252 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 31 ¾ சூரி.செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc உதவிக் கல்விப் பணிப்பாளர்<br>எதிர்பார்ப்பு : அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/11733 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 2<br>கி.பா: சூரி.செவ் 5 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L போட்டோ கிராப்பர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13254 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>கி.பா: 54 சூரி 1 செவ் 4 இல்<br>உயரம்: 4'4"<br>தகைமை/தொழில்: B.com<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/11739 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளம் வான்பாயாததால்

# பூநகரி கரியாலைநாகபடுவானில் சிறுபோகம் மேற்கொள்வதில் சிக்கல்

## விவசாயிகள் தெரிவிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி கரியாலைநாகபடுவான் குளத்தில் தற்போது ஐந்தடிக்கு குறைவான நீர் மட்டம் காணப்படுவதன் காரணமாக எதிர்வரும் சிறுபோகத்தினை மேற்கொள்வதில் தடைகள் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாகிய கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் தற்போது 1,200 ஏக்கர் மேலான நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

சிறுபோகம் 600 ஏக்கரில் மேற்கொள்ளப்படுவது வழமை. இக்குளத்தின் நீர் மட்டம் தற்போது ஐந்தடிக்கு குறைவாக காணப்படுவதன் காரணமாக விவசாயிகள் சிறுபோகத்தில் ஈடுபட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

வழமையாக இக்குளத்தில் இக்காலத்தில் 10 அடி 10 அங்குலமாக நீர் மட்டம் உயர்ந்து வான் பாயும் நிலையில் இம்முறை குளத்திற்கான நீர் வரவு இடம்பெறவில்லை.

இக்குளத்திற்கான நீர் வரவினை அதிகரிப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை நிறைவேற்றப் படாததன் காரணமாக குளத்தின் நீர் மட்டம் குறைவதற்கு முக்கிய காரணமாக உள்ளது எனத் தெரிவித்தனர். (4-350)

# வெளிநாட்டு பணிப் பெண்களுக்கு புதிய காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு வேலைக்காக செல்லும் பெண்களின் பாதுகாப்புக்காக, புதிய காப்புறுதி முறைமையை அறிமுகப்படுத்த, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தீர்மானித்துள்ளது.

இன்று முதல், இந்தப் புதிய காப்புறுதி அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக அந்தப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

புலம்பெயர் பெண் பணியாளர்களை, ஆட்சேர்க்கும் தொழில் தருநர்களினால், இந்தக் காப்புறுதி கட்டாயமாக வழங்கப்பட வேண்டும்.

அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக, குறித்த பெண்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்வதற்காக, குறித்த காப்புறுதிச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

குவைட், கட்டார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான், பஹ்ரைன், ஜோர்தான், லெபனான் முதலான நாடுகளுக்கு வீட்டு வேலைக்காக செல்லும் பெண்கள், தகுந்த காப்புறுதியைத் தெரிவு செய்ய முடியும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டுள்ளது. (4)

# கமால் குணரத்ன பதவியிலிருந்து நீக்கம்?



(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல் கமல் குணரத்னவை நீக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

போராட்டம் நடைபெற்ற காலத்தில் போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, ஜனாதிபதி செயலகம் உட்பட அரசின் உயர்மட்ட இடங்களுக்குள் புகுந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு தரப்பினர் ஊடாக இதனை தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கமல் குணரத்னவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து நீக்கி விட்டு, ஓய்வு பெற்ற இராணுவ தளபதி ஜெனரல் மஹேஷ் சேனாநாயக்கவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆலோசரான ருவான் விஜேவர்தனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடம் இந்த யோசனையை முன்வைத்துள்ளார். (4)

# ஜனாதிபதி ரணில் தமிழர் தாயகத்தில் காலடி வைப்பதை அங்கீகரிக்க முடியாது

## அருட் தந்தை சக்திவேல்

(நெளுக்குளம்)

தேசிய பொங்கல் என ஜனாதிபதி தமிழர் தாயகத்தில் காலடி வைப்பதை அங்கீகரிக்க முடியாது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார். அவரால் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தைப்பொங்கல் என்பது பானையும் அரிசியும் அடுப்பும் சம்பந்தப்பட்ட விடயம் மட்டுமல்ல உழைப்பாளரின் வியர்வை, அதனால் விளைந்த விளைச்சல் உழைப்பு, உழைப்புக்கு அடிப்படை காரணமான மண் அதனுடைய உரிமை கலந்த விடயமாகும். இதிலே வாழ்வும் வளமும் தங்கி இருக்கின்றன.

கலாசார சிறப்போடு தேச உணர்வும் அதன் பாதுகாப்பும் அதற்கான உறுதியும் மேலோங்கி இருக்கின்றது. இவற்றையெல்லாம் சிதைத்தழித்து தொடர் அழிவுகளுக்கும் திட்டமிட்டு கொண்டு தேசிய பொங்கல் என்று ஜனாதிபதி தமிழர் தாயகத்தில் காலடி வைப்பதோ அவரின் வருகையை வரவேற்பதையோ நாம் எந்த வகையிலும் அங்கீகரிக்க முடியாது.

தமிழர்களின் தேசியப் பாதுகாப்பிற்காக போராடி உயிர்த் தியாகமானோரை சொந்த மண்ணிலே நினைவுகூற முடியாது. இறுதி யுத்தத்தில் வான் தாக்குதலாலும் நச்சு குண்டுகளாலும் படுகொலை செய்யப்பட்டோரை கூட்டாக நினைவுகூறுவதற்கு முடியாதுள்ளது. வலிந்து காணாமலாக்கப் பட்டோர்க்கு நீதி இல்லை. தமிழர் தேச தேசியத்தின் உயிர்த் துடிப்போடு இயங்கியவர்கள் அரசியல் கைதிகளாகி விடுதலை இன்றி வாடுகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் அடிப்படை காரணர்களில் ஒருவரான தற்போதைய ஜனாதிபதி தேசிய தைப்பொங்கல் என தமிழர்கள் மத்தியில் வந்து உழைப்பின் விழாவை பாரம்பரிய தேசிய நிகழ்வை அசிங்கப்படுத்துவதற்கு இடமளிக்கக் கூடாது எனத் தெரிவித்தார். (4-299)

# மனைவியை கொன்று விட்டு மாடியிலிருந்து குதித்த கணவன்

## கொழும்பில் சம்பவம்

(கொழும்பு)

பொரளை சர்ப்பன்டைன் அடுக்குமாடி குடியிருப்பில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக கணவன் தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி நேற்று முன்தினம் இரவு கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

32 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொலையை செய்த நபர் அடுக்குமாடி குடியிருப்பின் மூன்றாவது மாடியில் இருந்து குதித்து படுகாயமடைந்துள்ள நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (4)

# விநோதமான முறையில் தங்கக் கடத்தல்

## வசமாக சிக்கிய பெண்

(கொழும்பு)

இலங்கைக்கு சட்ட விரோத மாக தங்கத்தை கடத்தி வர பயன்படுத்தப்படும் புதிய முறையை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

24 கரட் தங்கத்தினால் செய்யப்பட்ட ஒரு கோடியே 15 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கடன் அட்டைகளை கடத்தி வந்த பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வெளியேறும் முனைத்தில் வைத்து சங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பார்ப்பதற்கு வங்கிகள் வழங்கிய கடன் அட்டைகளை போல் இருக்கும் வகையில் இந்த தங்க கடன் அட்டைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பெண் கொண்டு வந்த பயணப்பொதியில் 6.5 கிலோ கிராம் எடை கொண்ட தங்கத்தினால் செய்யப்பட்ட 27 வங்கி கடன் அட்டைகள், தங்கச்சங்கிலிகள், வளையல்கள், மோதிரங்கள் என்பன மறைத்து வைக்கப்பட்டிருந்தாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தங்கம் இவ்வாறு சட்டவிரோதமாக கடத்திவரப்படுவதன் காரணமாகவே 24 கரட் தங்கத்தில் தயாரிக்கப்பட்ட தங்க ஆபரணங்களை இலங்கைக்கு கொண்டு வர தடைவிதித்து நிதியமைச்சு சிறப்பு உத்தரவை பிறப்பித்துள்ளது. (4)

# உயர்தர பரீட்சை காலத்தில் மின்வெட்டு அமுல்படுத்தப்படாது

## பரீட்சைகள் திணைக்களம்

(கொழும்பு)

இம்முறை கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை நடைபெறும் காலப் பகுதியில் நாளாந்த மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என அதிகாரிகள் தமக்கு அறிவித்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தமது திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, மின்சார சபை உள்ளிட்ட உரிய அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

2022 ஆம்ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலப் பகுதியில் உயர்தர பரீட்சைகளை தடையின்றி நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது.
அதை யாராலும் மூடிமறைக்க முடியாது.
~ மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii:lk

# தமிழர் தலைநிமிர தை மகளே பொங்குக!

இன்று தைப்பொங்கல். தமிழர் திருநாளான தைப்பொங்கல் சூரியனுக்கு நன்றி செலுத்துகின்ற சூரியப் பொங்கலாக அமைகின்றது.

இப்பூமியின் கண் வாழுகின்ற அத்தனை ஜீவராசிகளும் உயிர்வாழ்வதற்கு மூலகாரணனாய் இருக்கின்ற சூரியபகவானுக்கு நன்றி தெரிவிக்கின்ற திருநாளாகத் தைப்பொங்கலை நம் தமிழ் மக்கள் போற்றி வருகின்றனர்.

ஆம், மனிதகுலமும் அதனோடு இணைந்த ஜீவராசிகளும் வாழ்வதற்கான உணவை உற்பத்தி செய்வதற்குப் பக்கபலமாக இருக்கின்ற சூரியபகவானைப் போற்றி வழிபடுகின்ற பண்பாடு நமக்குரியதெனும்போது, அதற்குள் இருக்கக்கூடிய நம் மூத்த தமிழ்க் குடியின் நன்றி உணர்வும் அறிவியல் பாங்கும் எத்துணை உயர்வானவை என்பதை நாம் உணர முடியும்.

உழுது விளைவித்து வேளாண்மை செய்த விவசாயி, தன் விளைநிலத்தில் விளைந்த நெற்தானிய புத்தரிசியை பொங்கல் செய்து தன் தோட்டத்தில் முற்றி விளைந்த முக்கனிகளும் கரும்பு, பசும்பால், இளநீர் ஆயவற்றையும் சூரியபகவானுக்குப் படைத்து வழிபட்டு நன்றி செலுத்துகின்ற நாளே தைப்பொங்கல் திருநாள்.

ஒரு மனிதனின் உணவுத் தேவையை அவனே பூர்த்தி செய்ய வேண்டும் என்ற சுய பொருளாதார தன்னிறைவை உணர்த்துகின்ற ஒருபெரும் நாளாகவும் தைப்பொங்கல் அமைகிறது.

ஆம், மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்... என்ற தேவாரத் திருமுறை போதிக்கின்ற தத்துவம் என்பது இப்பூமியின் கண் வாழுகின்ற அத்தனை மனிதர்களுக்கும் இந்த மண் உணவைத்தந்தருளும்.

எவர் எத்தொழில் செயினும் வேளாண் விவசாயம் செய்து தமக்கான உணவை, பழவகைகளை, மரக்கறிகளை இந்த நிலத்தினின்றும் உற்பத்தி செய்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு பெற்றுக்கொண்ட உணவை தமக்கும் இல்லாதவர்களுக்கும் ஏழைகளுக்கும் எம்மோடு சேர்ந்து வாழுகின்ற இதர ஜீவராசிகளுக்கும் பகுத்துக் கொடுத்துப் பல்லுயிர் காக்க வேண்டும். அதுவே தர்மம்.

அந்தத் தர்மத்தை சூரியப் பொங்கலோடு ஆரம்பிப்பதாகவும் தைப்பொங்கல் திருநாளை நம் தமிழ்ப் பெருமக்கள் வகுத்தனர்.

உண்மை. கண்கண்ட தெய்வமாக இருக்கக்கூடிய சூரியனே நம் வாழ்வுக்கு துணையானவன்.

அவனே நாம் உயிர்வாழ்வதற்கு மூலமானவன். அவனே நம் இகபர வாழ்வுக்குச் சாட்சியானவன். அவனின் சாட்சியம் நம் தமிழ் மக்களுக்கு சுதந்திரமான வாழ்வைத் தரட்டும்.

# சிவன் கோவிலுக்கு ஜனாதிபதி வருவதை கிறிஸ்தவ பாதிரியார் தடுப்பது முறையா?

## மறவன்புலவு சச்சிதானந்தன் கேள்வி

(யாழ்ப்பாணம்)

சிவன் கோயில் நிகழ்ச்சிக்கு - சைவ நிகழ்ச்சிக்கு யார் வரலாம் யார் வரக்கூடாது என்பதைச் சைவர்களே தீர்மானிப்பாரன்றி, கிறிஸ்தவப் பாதிரியார் அல்ல என சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நல்லூர் சிவன் கோயிலிலும் அடுத்துள்ள சைவ மண்டபத்திலும் நடக்கின்ற சூரியனுக்கு நன்றி சொல்கின்ற பொங்கல் விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்கிறார்.

சிவன் கோயிலில் நடக்கும் விழாவில் ஜனாதி பதி கால் வைக்கக் கூடாது என்று கூறும் உரிமை கிறிஸ்தவப் பாதிரியாருக்குக் கிடையவே கிடையாது. மடுமாதா கோவிலுக்கு ஜனாதிபதி வந்த பொழுது சைவர்கள் அதனை எதிர்க்கவில்லை.

மன்னார் ஆயர் அண்மையில் ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்ற பொழுதும் சைவர்கள் அதனை எதிர்க்கவில்லை.

ஆனால் சைவ விழாவிற்கு வருகின்ற ஜனாதிபதியை கிறிஸ்தவ பாதிரியார் கால் வைக்கக் கூடாது என்று கூறுகின்ற கொடுமையை இலங்கையிலேயே பார்க்க முடியும்.

கத்தோலிக்கரும் கிறிஸ்தவரும் ஜனாதிபதி யோடு நல்லிணக்கமாக உறவாடி வருகின்றார்கள்.

நிலைமை இதுவாக இருக்கையில், சிவன் கோவிலுக்கு ஜனாதிபதி வருவதை ஒரு கிறிஸ்தவ பாதிரியார் எதிர்ப்பது எந்த வகையில் நியாயம் என்ற கேள்வியையும் அந்த அறிக்கையில் மறவன் புலவு சச்சிதானந்தன் எழுப்பியுள்ளார். (4)

# தமிழ் மக்களின் கோரிக்கைகளை தமிழரசுக் கட்சி மறுதலித்துள்ளது

## – சுரேஷ் சுட்டிக்காட்டு

தமிழ் மக்களுக்கான நிரந்தரமான தீர்வை நோக்கி தமிழ் தேசிய பரப்பிலுள்ள கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசிய கட்சி, மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன இணைந்து புதிய கூட்டணிக்கான ஒப்பந்தத்தில் நேற்று கைச்சாத்திட்டுள்ளன.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி எனும் பெயரில் குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

குறிப்பாக தமிழ் பரப்பிலுள்ள கட்சிகள் அனைத்தும் ஒன்றுபடவேண்டும் என்ற தேவை மற்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்ததாகவும் ஆனால் தமிழரசு கட்சி அனைவரினது எதிர்பார்ப்பிற்கு மாறாக செயற்பட்டுள்ளதாக சுரேஷ்பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். (4-7)

# மனவளக்கலை யோகா பயிற்சிகள்

மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5.00 மணிக்கு இல.81, பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் R.K.விஜய நிர்மலா வழங்குவார்.

மேலதிக தகவலுக்கு 021 222 2772 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# புற்றுநோய் மருந்துகள் அடுத்தவாரம் கிடைக்கும்

## சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

தற்போது நாட்டில் தட்டுப்பாடாகவுள்ள புற்றுநோய்க்கான 43 வகை மருந்துகள் அடுத்த மாதமளவில் கிடைக்கும் என சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இந்திய கடனுதவி மற்றும் உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் மருந்து வகைகள் கொண்டு வரப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜானக்க ஸ்ரீ சந்திரகுப்த குறிப்பிட்டார்.

தட்டுப்பாடு நிலவும் மருந்துகளை இலங்கைக்கு இறக்குமதி செய்வது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலின் போதே இந்த தகவல் வெளியானதாக சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். (4-7)

# புதிய கூட்டணி அமைந்தாலும் ஒன்றாகவே பயணிப்போம் - மாவை

(கொழும்பு)

தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு தொடர்பில் புதிய கூட்டணிகள் உருவானாலும் தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளுடன் ஒன்றாகவே பயணிப்போம் என்ற நம்பிக்கை தனக்கு உள்ளதாக தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

நேற்றையதினம் சனிக்கிழமை யாழில் இந்த கட்சிகள் இணைந்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற கட்சியை அறிவித்தமை தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசியப் பரப்பில் பயணிக்கின்ற தேசியம் சார்ந்த கட்சிகள் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு தொடர்பில் இணைந்து பணியாற்றுகின்றன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசு கட்சி உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் மத்திய குழுவில் தீர்மானிக்கப்பட்டது யாவரும் அறிந்தது.

குறித்த தீர்மானத்தை எடுத்ததால் நாங்கள் சக கட்சிகளுடனோ அல்லது அவர்கள் எங்களுடனோ இணைந்து பணியாற்றாமல் விடுவதென்று அர்த்தம் அல்ல. நாங்கள் கொழும்பில் தமிழ் கூட்டமைப்பு பங்காளிகளுடன் குறித்த முடிவை எடுத்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஒன்றாகவே சென்று சந்தித்தோம்.

அதுமட்டும் அல்லாது தமிழ் மக்களுடைய நீண்டகால அரசியல்பிரச்சினையை தீர்ப்பதற்கு எமது சக தமிழ் கட்சிகளுடன் நாங்கள் அனைவரும் ஒன்றாகவே பயணித்திருக்கிறோம் எனத் தெரிவித்தார். (4-7,104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொது இணக்கக் கொள்கையை முன்வைத்தால் அரசியல் தீர்வுப் பேச்சு

## அநுர தெரிவிப்பு

**கொழும்பு— அரசியல் தீர்வு விவகாரத்தில் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கமும் முதலில் பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



பொது இணக்கக் கொள்கையை முன்வைத்தால் அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டார்.


மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதற்காக நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட பல செயற்பாடுகளை பொதுஜன பெரமுன பாராளுமன்றத்திலும் வெளியிலும் எதிர்ப்பை வெளிப்படுத்தியது என்றும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் அரசியல் தீர்வு விவகாரம் குறுகிய அரசியல் தேவைக்காக பயன்படுத்திக் கொள்ளப்படுவதால் அதில் கலந்துகொள்ளவில்லை என்றும் அநுரகுமார தெரிவித்தார்.

ஏனைய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்னர் அரசியல் தீர்வு குறித்து ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவும் முதலில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (4)

# சிகிரியாக் குன்றிலிருந்து சூரிய உதயம் காணலாம்



(கொழும்பு)

சிகிரியாக் குன்றிலிருந்து சூரிய உதயத்தை காண்பதற்கான வசதி மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இன்று தொடக்கம் இந்தக் காட்சியை பார்வையிட முடியும் என்று மத்திய கலாசார நிதியம் அறிவித்துள்ளது.

கூடுதலான சுற்றுலாப் பயணிகளை கவரும் நோக்கோடு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

நாளாந்தம் அதிகாலை 5.30 இற்கு சிகிரியாக் குன்றின் மீது ஏறுவதற்கான பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படவுள்ளன. இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகள் சிகிரியாக் குன்றினை பார்வையிட ஆர்வம் காட்டுகின்றனர். (4)

# உள்ளூராட்சி தேர்தலில் 'அரகலய' மக்கள் இயக்கம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 'அரகலய' மக்கள் இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள் குழுவொன்று 'பலூன்' சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

கொழும்பில் முதலில் அதிகாரத்தை நிலைநாட்டுவதும் அதன் பின்னர் அமைப்பை மாற்றுவதும் குழுவின் நோக்கம் என்று ஆர்வலர் தனீஷ் அலி கூறினார்.

ஸ்ரீ லங்கா சோசலிசக் கட்சியின் செயலாளர் மகிந்த தேவகே இந்தக் குழு தேர்தலுக்கான கட்டுப்பணத்தை வெற்றிகரமாக செலுத்தியுள்ளதாக ஊடகங்களுக்கு தெரிவித்தார். கட்சி செயற்பாட்டாளர்கள் குழுவை ஆதரிப்பதாகவும் கொழும்பு மாநகர சபைக்கு போட்டியிடுவதற்கு கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்த அவர் கொழும்பு அரகலயவுக்கு சொந்தமானது என அவர் மேலும் தெரிவித்தார். (4)

# முட்டை உற்பத்தியாளர்களை விட இடைத்தரகர்களுக்கே அதிக இலாபம்

## விலங்கு அபிவிருத்தி ஆலோசகர் சங்கம்

(கொழும்பு)

முட்டை உற்பத்தியாளர்களை விடவும், இடைத்தரகர்கள் தற்போது அதிக இலாபம் ஈட்டுவதாக அகில இலங்கை விலங்கு அபிவிருத்தி ஆலோசகர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டீ.ஓ. நிஷாந்த குமார தெரிவித்துள்ளார்.

முட்டையின் விலை பற்றி சகல சந்தர்ப்பங்களிலும் பேசப்படுகின்றதே தவிர, உற்பத்தியாளரின் செலவு குறித்து பேசப்படுவதில்லை.

உற்பத்தியாளரிடமிருந்து, நுகர்வோருக்கு முட்டை கிடைக்கும் நிலை வரையான இடைவெளி குறித்த கவனம் செலுத்த வேண்டும்.

எனவே, இடைத்தரகர்களினால் ஏற்படும் இடைவெளியைக் குறைப்பதன் மூலம், முட்டை உற்பத்தித் தொழில்துறைக்கு சாதகத் தன்மையை ஏற்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# 17 முதல் 22 வரை பாராளுமன்று கூடும்

(கொழும்பு)

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டமூலத்தை விவாதத்துக்கு எடுப்பது தொடர்பான இறுதித்தீர்மானம் மேற்கொள்ள எதிர்வரும் புதன்கிழமை பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு மீண்டும் கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தை எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை கூட்டுவதற்கு நேற்று முன்தினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5 மணி வரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 2307/12 மற்றும் 2308/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழ் 2308/51 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்படவுள்ளதாக செயலாளர் குறிப்பிட்டார். (4)

# வசந்த முதலிகேவிற்கு பிணை



(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகையிலிருந்த பணம் காணாமற்போனமை தொடர்பான வழக்கில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவிற்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்தப் பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்திற்குள் நுழைந்த 72 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கோட்டை பொலிஸ் நிலையம் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவை வழக்கின் 73 ஆவது சந்தேக நபராக பெயரிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 650 | 650 | 600 | 700 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 350 | 350 |
| தக்காளி | 250 | 260 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 240 |
| கோவா | 80 | 100 | 150 | 150 |
| கரட் | 200 | 240 | 280 | 320 |
| பூசணி | 120 | 180 | 140 | 160 |
| புடோல் | 250 | 250 | 200 | 240 |
| வாழைக்காய் | 150 | 180 | 140 | 200 |
| சின்ன வெங்காயம் | 650 | 600 | 900 | 800 |
| பெரிய வெங்காயம் | 240 | 180 | 200 | 240 |
| பாகற்காய் | 700 | 400 | 500 | 600 |
| வெண்டிக்காய் | 250 | — | 120 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 650 | 500 |
| லீக்ஸ் | 420 | 350 | 400 | 500 |
| பீற்றூட் | 450 | 340 | 430 | 500 |
| கறிமிளகாய் | 600 | 700 | 700 | 700 |
| முருங்கைக்காய் | 1800 | 2400 | 1400 | 1600 |
| போஞ்சி | 380 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 600 | 500 | — | 600 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 150 | 150 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 40-80 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 300 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 550 | 700 |
| முள்ளங்கி | 150 | 100 | 150 | 140 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 |
| வல்லாரை | 50 | 30 | 40 | 50 |
| ஈரப்பலா | — | — | — | 150 |

# சுற்றுலாப் பயணிகளுக்கு தடுப்பூசி அட்டை கட்டாயம்

## சுற்றுலா அமைச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய கொரோனா நடைமுறைகள் தொடர்பில் சுற்றுலா அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கட்டாயம் கொரோனா தடுப்பூசி அட்டையை வைத்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொரோனா தடுப்பூசி போடாத சுற்றுலாப் பயணிகள் வருகைக்கு 72 மணி நேரத்திற்கு முன்னர் பெறப்பட்ட PCR அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் சுற்றுலாத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாள்களுடன்...

படையில் பொலிஸார் இந்த கைதினை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த வுள்ளதாக பொலிஸார் தெரிவிக் கின்றனர். (4-7,104)

## வாள்முனையில்...

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த நபரை, இருபாலை பகுதியில், இரண்டு மோட்டார் சைக் கிளில் வாள்களுடன் நின்ற நால்வர் அடங்கிய குழுவொன்று, வாளினை காட்டி வீதியில் பயணித்தவரின் மோட் டார் சைக்கிளைக் கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர். (4-7,33)

## 46 இலங்கையர்...

மீன்பிடி இழுவை படகில் குறித்த நபர்கள் புறப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

தனிநபர்கள் குழுவில் பல நாள் மீன்பிடி கப்பலின் பணியாளர்கள், இரண்டு பெண்கள் மற்றும் ஒரு குழந்தை உட்பட 43 ஆண்கள் உள்ளனர்.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி பிரான்ஸின் ரீயூனியன் தீவிற்குள் சட்டவிரோதமாக நுழைய முற்பட்டபோது அவர்கள் கைது செய் யப்பட்டனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், கிளி நொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட் டக்களப்பு, சிலாபம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இவர்கள் அனை வரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக் காக குற்றப் புலனாய்வு திணைக்களத் திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (4)

## நீண்டகாலமாக...

திருநாளை மதித்து யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அவர்கள், கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சைவ மக் களின் வழிபாட்டுத் தலங்கள் பாது காப்பு வலயம் என்ற பேரில் மக்கள் வழிபாடு செய்யும் உரிமை மறுக்கப் பட்டு வருவதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்நாட்டில் உண்மையான தர்மத் தைப் பேண வேண்டுமானால், எமது தொண்மைவாய்ந்த ஆலயங்களில் பூசை வழிபாடுகள் நடைபெறவேண்டும்.

கீரிமலை ஆதிச் சிவன் ஆலயம், கீரிமலை கிருஷ்ணன் கோவில், கீரி மலை சடையம்மா மடம், காங்கேசன் துறை சிவபூமி சுக்கிரவார திருவோணச் சத்திரம், வயாவிளான் மாம்பிராய் பிள்ளையார் கோவில், பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோவில் போன்ற முக்கிய தலங்களும் வேறு சில ஆலயங்களும் வழிபாடின்றி தீபங் கள் ஏற்றப்படாமல் இருளிலுள்ளன.

எனவே வடக்கில் பொங்கல் வழி பாட்டிற்கு வரும் தாங்கள் இவ்வாலயங் களை மக்களிடம் கையளித்து உதவ வேண்டும்.

காங்கேசன்துறையில் தல்செவன ஹோட்டலை நடத்தும் படையினர் பாரம்பரியமான சத்திரத்தை இடித்து விட்டு அதனைத் தமது ஹோட்டல் வளவோடு சேர்த்து வைத்துள்ளனர்.

இவை சைவ மக்களின் மனதில் மிகுந்த வேதனையைத் தருகிறது. எனவே இவற்றை உடனடியாக உரிய வர்களிடம் கையளிப்பதற்கு தாங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என சைவ மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார் கள்.

இவ்விடயம் தொடர்பாக, கடந்த முப்பது ஆண்டுகளாக பதவியில் இருந்த பலரிடமும் நாம் முறையிட்டும் எவ்வித பயனும் ஏற்படவில்லை.

இந்த தருணத்திலாவது இப்பிரச் சினையைத் தீர்த்து வைக்குமாறு சைவ மக்கள் சார்பில் நன்றியுடன் வேண்டுகிறோம் என்றும் அதில் தெரி விக்கப்பட்டுள்ளது. (4-7)

## தேசிய பொங்கல்...

ரணிலின் வருகையை முன்னிட்டு நல்லூர்ப் பகுதியில் பொலிஸார், இராணுவத்தினரின் பாதுகாப்பு நட வடிக்கைகள் தீவிரமடைந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று காலை யாழ். பலாலி விமான நிலையத்தில் வந்து இறங்கவுள்ளார்.

அதன்பின், காலை 9.00 மணி யளவில் நாகவிகாரைக்குச் சென்று, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அங்கு சந்திக்கவுள்ளார்.

அதைத் தொடர்ந்து ஆயர் இல்லம் போன்ற இடங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

பின்னர், மதியம் 12 மணியளவில் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள சிவன் கோவிலில் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு, துர்க்காதேவி மண்டபத்தில் 3.00 மணியளவில் நடைபெறும் நிகழ் வில் கலந்து கொள்ளவுள்ளார்.

அதைத் தொடர்ந்து நில அளவை யாளர் நாயகத்தின் பங்குபற்றுதலுடன் மாவட்டச் செயலகத்தில் காணி விடு விப்புத் தொடர்பான விசேட கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார். (4-7)

## கூட்டமைப்பின்...

கூட்டணியானது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரை தமது பதாகையில்பயன் படுத்த ஆரம்பித் துள்ளமை தொடர் பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை தமி ழரசுக் கட்சியின் பெரும்பான்மை யானவர்கள் இம் முறை உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலுக்கு தனித்து முகங் கொடுப்பதென சிபாரிசு செய் திருந்த நிலை யில் அது தொடர் பிலான தீர்மானங் களை எடுப்பதற் காக பங்காளிகளு டன் கொழும்பில் சந்திப்பொன்று நடைபெற்றது.

சம்பந்தன் வீட் டில் நடைபெற்ற இந்தச் சந்திப் பின்போது, தமி ழரசுக் கட்சியின் மத்திய குழுவின் சிபார்சினை முன் வைத்து உரை யாடியபோது, பங் காளிக் கட்சி களான ரெலோ மற்றும் புளொட் அதனை ஏற்றுக் கொண்டிருக்க வில்லை.

இந்நிலையில் அவர்கள் தனித்தோ அல் லது கூட்டாகவோ செல்வதாக அறி வித்திருந்தார்கள். அப்போது சம்பந் தன், கூட்டமைப் பின் பெயரைப் பயன்படுத்துவது தொடர் பில் வினவியிருந்தார். அதனையடுத்து நடத்தப்பட்ட பேச்சுக்களில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரை இரு தரப்பினரும் பயன்படுத்துவதில்லை என்று இணக்கம் காணப்பட்டது.

எனினும், தற்போது ஏற்படுத்தப் பட்ட இணக்கத்தினை அப்பெயர் பயன்படுத்தப்படுகின்றது. அது தொடர் பில் நாம் உரிய நடவடிக்கைகளை எடுப் போம் என்றார். (4-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 14/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1455
வெற்றி இலக்கங்கள்
கடகம் 6 1 6 1 2 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.01.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1030
P 09 21 49 58
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.01.14 சீட்டிழுப்பு இலக்கம் 3242
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
A 06 12 28 29
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 14/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1348
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
W 19 07 08 76 79

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.14
சீட்டிழுப்பு இலக்கம் 309
வெற்றி இலக்கங்கள்
கடகம் 04 23 37 58 கடகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/14
சீட்டிழுப்பு இலக்கம் 5000
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
F 4 2 1 0 7 6
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1975 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.01.14 தினம் சனிக்கிழமை
B 37 57 64 73
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,535,740/-

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.14
சீட்டிழுப்பு இல : 4136
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,015,520/-
வெற்றி இலக்கங்கள்
09 28 30 56 D
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,073,150/-
திகதி 2023-01-14
வெற்றி வாரம் 3687
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 01 25 27 53
4499 957
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,314,560/-

29 ஸப்பிரி
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 38 06 28 66 76
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1151
வர்ணம் சிவப்பு
திகதி 2023.01.14 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 297,463,982.20
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 562 திகதி 2023-01-14 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள் விதி எண்
T 07 22 37 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 16,075,636/-
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1801
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.01.14
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,683,640/-
வெற்றி இலக்கங்கள்
02 19 28 68 G

மீண்டும் ஒருமுறை
5 இலட்சம் பரிசு
யாழ். பருத்தித்துறை வாசி வசம்
தேசிய லொத்தர் சபையின் லொத்தர் சீட்டான **ஹந்தஹன ராசி சுபபலன்** லொத்தர் சீட்டின் 307ஆவது சீட்டிழுப்பின் சுப்பர் பரிசான 5 இலட்சமானது பருத்தித்துறையைச் சேர்ந்த விற்பனை முகவரான **திரு. பூபாலசிங்கம்** அவர்களி னால் விற்பனை செய்யப்பட்டு பருத்தித்துறை வாசி ஒரு வரினால் வெல்லப்பட்டுள்ளது.
(C-5785)
பருத்தித்துறை விற்பனை முகவர்
பூபாலசிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்

நேரடி & ZOOM

**A/L 2023, A/L 2024**

# கணக்கீடு

(தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்)

MR. BALAKAJEN

KBK ACCOUNTING COLLEGE

- பலாலி வீதி, கந்தர்மடம். 077 216 8884
- கஸ்தூரியார் வீதி, கொழும்புத்துறை. Whatsapp - 077 452 0043

(14255)



## சிங்களம் பேசுவோம்

விரைவாகவும், தெளிவாகவும் சிங்களம் பேச, சிறந்த பேச்சு பயிற்சியுடன் கூடிய வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

தொடர்புக்கு :-

**077 065 2181**

**070 403 5735**

ZOOM - 2023

(14267)


## கைவிரலை வெட்டி மோதிரம் அபகரிப்பு

வீட்டில் நுழைந்த கொள்ளையர்கள் மோதிரம் ஒன்றை கொள்ளையிட முடியாததன் காரணமாக அவரின் விரலை கத்தியால் வெட்டிவிட்டு மோதிரத்தினை கொள்ளையிட்ட பரபரப்பான சம்பவம் பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தம்பசிட்டி பூவக்கரைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு பகுதியில் வசிக்கும் பழனியாண்டி என்பவர் தம்பசிட்டி பகுதியில் உள்ள சகோதரனின் வீட்டில் தங்கியிருந்த போது வீட்டில் அத்துமீறி உள்நுழைந்த மூவர் அவரின் கையில் இருந்த மூன்று மோதிரத்தை கொள்ளையிட்டதுடன் மற்றைய மோதிரம் களறாததால் கைவிரலை வெட்டி மற்றைய மோதிரத்தையும் கொள்ளையிட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-7.60)


## இராஜ மருத்துவம்

வாதம், குத்துளைவு, பாரிசவாதம், கரப்பன், கிரந்தி, சொறி, வீக்கம், நோவு, சளி, தும்மல், பீநசம், நீரிழிவு, கெர்ப்பவாயு, நெஞ்சுக்குத்து, இளநரை, சொடுகு, மயிர் வளர்சியின்மை, நித்திரையின்மைக்கு சிகிச்சை பெற பேரறிஞர்

DR.K.பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர், T.P : 076 274 4488

வல்லைவீதி, சங்கானை. (C-5784)



## குத்தகைக்கு

யாழ் நகர்ப்பகுதியில் இயங்கிய பிரபல உணவகம் ஒன்று சகல வசதிகளுடனும் நாள்/மாத குத்தகைக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு

077 725 1036 அழைக்கவும்

(14261)



## காணி வீடு விற்பனைக்கு

நாவலர் வீதிக்கும் கண்டி வீதிக்கும் அருகில் உள்ள வெட்டுக் கிணறு, கார் பார்க்கிங் வசதி, சுற்றிவர மதில் உடைய ஐந்து அறைகள் Attach Bath Room வசதி உடைய வீட்டுடன் கூடிய 1 1/2 நிலப்பரப்புடைய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- **077 627 3493**

(14239)



# IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

(13675)



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருள்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களாகிய எம்மிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.

எமது உத்தரவாதத்துக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள், ஏமாற வேண்டாம் உத்தரவாதம் தரும்பொழுது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து பார்க்கவும்.

உலகத்தரமிக்கது

வட மாகாணத்தில் முதன் முதலில் 12 வருடங்களுக்கு முன் அறிமுகம் செய்தவர்கள்




(14263)

FINEX இரசாயனப் பொருள்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

**North and East Engineering**

55 Stanly Road, Jaffna, Srilanka.

021 222 2363, 077 524 4177, 077 232 3000

northandeastengineering.com



## நாகபூஷணி திருமண சேவை

இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

பல்லாயிரக்கணக்கில் மணமக்கள் எம்மிடம் உள்ளனர் மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

021 222 9308, 077 138 7596, 071 999 9308

(C-5786)



## மணமகள் தேவை

1989 இல் பிறந்த உள்நாட்டு இந்து, செவ்வாய்க் குற்றமுள்ள ஐம்பொன் சிலைகள், கொடித்தம்பம், கலசங்கள் செய்யும் மாதம் 5 இலட்சத்திற்கு மேல் சம்பாதிக்கும் முதலாளி மணமகனுக்கு உள் நாட்டில் மணமகள் தேவை.

**074 111 7874**

(14205)



# கடை விற்பனைக்குண்டு

இல 13, செம்மார் தெரு லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள 25 அடி நீளமும் 16 அடி அகலமும் உடைய கடை விற்பனைக்குண்டு.

## விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம் : காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை

**தொடர்பு : ஜெயம் - 077 986 5457**

(14265)



# JOB OPPORTUNITIES - JAFFNA



A well reputed and largest Private University in Sri Lanka joined hands with Multinational Company is looking for dynamic & enthusiastic candidates to the drive Business Development & Student recruitments in North & East Region.

**Positions called for;**

1. **Business Development Manager - 01 Position**
2. **Business Development Executive - 01 Position**
3. **Student Counsellors - 02 Positions**

**Note** : Selection will be carried through structured Interview and attractive MNC cultured salary will be provided to the suitable candidates.

Interested Candidates are encouraged to apply in confidence within 07 days of this advertisement to **handyT@northernuni.com** along with updated CV. (Please indicate the apply "Position" in subject heading in your email)

(14257)



## நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு

Skyline இன் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த் தொட்டி, கோவில் வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல்மாடி குளியல் அறைகள், நீரோடிகள், நீச்சல் தடாகங்கள்), வெடிப்புகள், நீர்க்கசிவுகளை உத்தரவாதத்துடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.

1 சதுர அடி 150/=... இருந்து

**Skyline Water Proofing**

No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.

077 722 0095/076 663 6481/021 221 4994

கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960

வவுனியா / மன்னார் - 077 279 0743

www.skylineholders.com

(14256)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org